வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 13.10.2021 புதன்கிழமை | இதழ் : 312 | பக்கங்கள் : 16




# நாட்டில் பஞ்சம் ஏற்பட இடமளிக்கமாட்டோம்

## உறுதிபட கூறுகிறார் நிதி அமைச்சர் பஸில்



கொழும்பு, ஒக்ரோபர் 13

நாட்டில் எந்தவகையிலும் பஞ்சம் ஏற்பட இடமளிக்க மாட்டோம் என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

15

இந்திய இராணுவம் செய்த

# பிரம்படி படுகொலை; நினைவுகூரப்பட்டது!



யாழ்ப்பாணம், ஒக். 13

கொக்குவில் பிரம்படி வீதியில் இந்திய இராணுவத்தினரின் தாக்குதலில் கொல்லப்பட்ட அப்பாவி பொதுமக்கள் 55 பேரின் 34ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று

15

## அரச மருத்துவ அதிகாரிகளின் போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, ஒக். 13

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இன்று நடத்தவிருந்த அடையாள பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சருடன் நேற்று நடத்தப்பட்ட பேச்சில், இடமாற்றம், நிறைவு காண் சேவைக்கு பின்னரான நியமனங்கள்

15

## ஆசிரியர் சம்பள விவகாரம் இரண்டு கட்டங்களாக தீர்வு

கொழும்பு, ஒக். 13

ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையிலான பேச்சு நிறைவடைந்துள்ளது. குறித்த பேச்சில் சம்பளப் பிரச்னை தொடர்பில் இரண்டு கட்டங்களில் தீர்வு தரப்படும் என்று அரசாங்கம் தெரிவித்

15

# மாகாண தேர்தலை எதிர்கொள்ள தயார்

## அமைச்சர் நாமல் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 13

மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு எமது கட்சி தயாராகவே இருக்கின்றது என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்- இந்திய வெளிவிவகார செயலாளரின் இலங்கை பயணத்துக்கும், மாகாண சபைத் தேர்தலுக்குமிடையில் எவ்வித தொடர்பும்

15

# அப்பன், தெய்வீகனை காட்டி கொடுத்தோர் யாரென கூறினால் அது தமிழ் அரசுக்கு நல்லதல்ல

## புளொட் தலைவர் சித்தார்த்தன் அதிரடி தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 13

“புலி உறுப்பினர்களான அப்பன், தெய்வீகன் ஆகியோரை காட்டிக்கொடுத்தோர் யார் என்பது மக்களுக்கு தெரியும். தெய்வீகன், அப்பன் போன்றோர் நேரடியாக காட்டிக் கொடுக்கப்பட்டு கொல்லப்பட்டார்கள். இவர்களை யார் காட்டிக்கொடுத்தார்கள் என்பது தொடர்பில் நான் தற்போது கூற

15

## கிழக்கில் முதல்வர் வேட்பாளராக களமிறங்குகின்றார் பிள்ளையான்?

கொழும்பு, ஒக். 13

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் களமிறங்குவார் என அறியமுடிகின்றது.

மொட்டு கூட்டணி

15

## சர்வசன வாக்கெடுப்பை ஐ. நா. சபை வடக்கு – கிழக்கில் நடத்தவேண்டும்!

### ‘குவாட்’ நாடுகளிடம் சிவாஜிலிங்கம் கோரிக்கை

வடமராட்சி, ஒக். 13

ஐக்கிய நாடுகள் சபை, வடக்கு - கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று அமெரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான் நாடுகளை உள்ளடக்கிய குவாட் அமைப்பிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதாக தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்

வல்வெட்டித்துறையில் உள்ள அவரது இல்

15

### சட்டவிரோதமாக நியூசிலாந்து செல்ல முயற்சி

# 65 வடக்கு மாகாணத்தவர்கள் திருகோணமலையில் கைது!

திருகோணமலை, ஒக்.13

சட்டவிரோதமாக நியூசிலாந்து செல்வதற்காக திருகோணமலையில் தங்கியிருந்த வடக்கு மாகாணத்தை சேர்ந்த 65 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனியார் விடுதி ஒன்றில் தங்கியிருந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் 63 ஆண்களும், பெண் ஒருவரும் 4 வயது குழந்தை ஒன்றும் உள்ளடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

15




**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளாத ஒருவர் சுமந்திரன். ஆனால், அந்த போராட்டத்தின் பிரதிநிதி போல செயல்பட்டுக் கொண்டிருப்பவர் சிறீதரன். விடுதலைப் புலிகளின் போராட்டத்தைத் தான் ஆதரிக்கவில்லை என்று சிங்கள ஊடகம் ஒன்றுக்குப் பேட்டி கொடுத்த சர்ச்சையில் சிக்கி தடுமாறிக்கொண்டிருந்த சுமந்திரனை, பகிரங்கமாக ஆதரித்து தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டார் சிறீதரன். இதனால் அவர் தனது வாக்கு வங்கியையும் இழந்திருக்கின்றார். அப்படி எதற்காக அவர் சுமந்திரனை ஆதரிக்கும் முடிவை எடுத்தார் என்பதும் அவருக்கு மாத்திரமே தெரிந்திருந்த சங்கதி.

சிறீதரனுக்கு நெருக்ககமான ஒருவர் அண்மையில் ஊர்க் குருவியை தொடர்புகொண்டு ஆச்சரியமான விடயம் ஒன்றை தெரிவித்தார்.

அந்த விடயம் இதுதான்: கடந்த தேர்தலின் போது, வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர் நிலவிய கொரோனா ஊரடங்கு காலத்தில் ஓர் இரவு, சிறீதரனை வீடு தேடி வந்து சந்தித்த சுமந்திரன், சிறீதரன் வீட்டில் இரவு உணவை அருந்தியபடி, தான் ஒரு முடிவு எடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்.

அதற்குச் சில நாட்களுக்கு முன்புதான், முன்னாள் நிதி அமைச்சரும் நல்லாட்சி அரசின் அச்சாணியாக இருந்தவருமான மங்கள சமரவீர, வேட்புமனுத்தாக்கல் செய்த பின்னர், தான் தேர்தல் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார்.

சிறீதரனை சந்தித்த சுமந்திரனும், மங்கள சமரவீரபோல, தானும் தேர்தல் போட்டியில் இருந்து வெளியேறப்போவதாக அறிவிக்க முடிவுசெய்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். மக்கள் மத்தியில் தனக்கு பலத்த எதிர்ப்புக் கிளம்பியிருப்பதால், தன்னால் வெல்ல முடியாமல் போய்விடலாம் என்று அதற்கு காரணமும் சொல்லியிருக்கிறார்.

இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்த சிறீதரன், “கொஞ்சம் யோசிச்சு செய்யுங்கோ. நாங்கள் எல்லாரும் இருக்கிறம்தானே” என்று அவரை ஆசுவாசப்படுத்தியிருக்கிறார். உணவருந்தி முடித்துவிட்டு விடைபெறும்போது, வீட்டு வாசலில் வைத்து, திடீரென, “நீங்கள் (சிறீதரன்) எனக்கு பகிரங்கமாக அறிவித்து ஆதரவு வழங்கினால், நான் எனது முடிவை மாற்றிக்கொண்டு தேர்தலில் போட்டியிடுகின்றேன்” என்று கேட்டிருக்கின்றார். மறுக்க முடியாத ஒரு தருணத்தில் வைத்து, தன்னிடம் கேட்கப்பட்ட ஓர் உதவியைச் செய்யும் நிர்ப்பந்த நிலை சிறீதரனுக்கு இப்படித்தான் நேர்ந்ததாம்.

கூட்டமைப்பின் தலைமைப் பதவிக்கு தான் தகுதியானவர் என்று சுமந்திரன் தெரிவித்ததாக வெளிவந்த செய்தியை அறிந்தபோது, இந்த விடயமும் ஞாபகத்திற்கு வந்தது.

ஏற்கனவே ஒரு தொலைக்காட்சி பேட்டியில் தனது தனிப்பட்ட கருத்தைச் சொல்லப்போய் சிக்கலில் மாட்டியவர் சுமந்திரன். ‘புலிகளின் போராட்டத்தை தான் தனிப்பட்ட வகையில் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், கூட்டமைப்பு - புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்ட ஒரு கட்சி’ என்பதையும், கூட்டமைப்பின் பேச்சாளராக அன்று அவர் அங்கு பதிவு செய்திருக்கவேண்டும். ஆனால், அதனை அவர் அப்போது செய்யவில்லை.

அதேபோலவே இப்போதும், கூட்டமைப்பின் தலைமைக்கு அவர் தகுதியானவரா என்று கேட்கப்பட்டால், ‘ஆம் தகுதியானவர்தான்’ என்று சொல்வதற்கு நிச்சயமாகச் சுமந்திரனுக்கு உரிமை இருக்கிறது. ஆனால், ‘அதற்கு தகுதியுடைய வேறு நபர்களும் கட்சிக்குள் இருக்கலாம். அதனால், அதனை கட்சியும் மக்களும்தான் தீர்மானிக்கவேண்டும்’ என்றும் ஒரு வார்த்தையைச் சேர்த்தே சுமந்திரன் சொல்லியிருக்க வேண்டும். அதுதான், ‘பேச்சாளர்’ பொறுப்பிலிருந்து நீக்கப்பட்ட பின்பும், ‘கடமை- நிறைவேற்று -பேச்சாளர்’ என்ற பொறுப்பிலிருந்து சுமந்திரன் சரியாக நடந்துகொண்டதாக ஆகியிருக்கும். ‘பேச்சாளர்’ பொறுப்பில் இருந்தபடி, பேச்சாளரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு, பேச்சாளராக அல்லாமல், தனிப்பட்ட சுமந்திரனாகப் பதில் அளித்ததே, ‘பேச்சாளர்’ பொறுப்பிலிருந்து அவர் நீக்கப்பட்டமைக்கும் காரணம். அதே தவறையே அவர் தொடர்ந்தும் செய்து வருகின்றார்.

தலைமை என்பது, தனது சொந்த கட்சியிலுள்ளவர்களை மட்டுமன்றி, தமது பங்காளி கட்சியினரையும் தனது ஆளுமையால் ‘கட்டிப்போடவேண்டிய’ ஒரு பொறுப்பு. பங்காளிக் கட்சிகளையே சர்வதேச நீதிமன்றில் நிறுத்தவேண்டும் என்று பகிரங்கமாகக் கருத்துச் சொல்கின்ற ஒருவர், எப்படி சம்பந்தன் வகிக்கும் தலைமைப் பொறுப்பிற்குத் தன்னைத் தகுதியானவர் என்று பிரகடனப்படுத்துகின்றார் என்பதை ஜீரணிக்கமுடியவில்லை. ஒருவர் எந்த பதவிக்கும் ஆசைப்படுவதில் தவறில்லை. ஆனால், தான் ஆசைப்படும் பதவிக்கு உரிய தகுதியும் பண்புகளும் தனக்கு இருப்பதை, தனது நடவடிக்கைகள் மூலம் அவர் முதலில் வெளிப்படுத்த வேண்டும்.

**- ஊர்க்குருவி**

# மகாபொல புலமைப்பரிசில் நிதியத்துக்கு அத்துலத் முதலியின் பெயர் சூட்டப்பட்டது

கொழும்பு, ஒக். 13

மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் பெயர், ‘லலித் அத்துலத் முதலி உயர்கல்வி உதவித் தொகை நம்பிக்கை நிதியம்’ என்று மாற்றப்படும் என நிதியத்தின் தற்போதைய தலைவரும் வர்த்தக அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்த்தன நேற்று தெரிவித்தார்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த, பல்கலைக்கழக கல்வி வாய்ப்பைப் பெறும் மாணவர்களுக்கு தனது சொந்தப் பணத்தில் நிதியத்தைத் தொடங்கிய மறைந்த வர்த்தக அமைச்சர் லலித் அதுலத்முதலிக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலேயே இந்த பெயர் மாற்றம் இடம்பெறுவதாகவும் அவர் கூறினார். (ஐ)

## வடக்கில் நேற்று 15 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஒக். 13

வவுனியாவில் 9 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 15 தொற்றாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். போதனா மருத்துவமனை, யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடங்களில் நடத்தப்பட்ட பி. சி. ஆர். பரிசோதனை முடிவு களிலேயே இந்தத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் நேற்று 75 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 5 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் அனைவரும் வவுனியா மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இதேபோன்று, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 147 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் வவுனியா பொது மருத்துவமனையில் 2 பேரும், செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் 2 பேரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

யாழ். போதனா மருத்துவமனையில் 4 பேரும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒருவரும் என யாழ். மாவட்டத்தில் ஐந்து பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

## மணல் அகழ்வை தடுக்குமாறு கோரி வழக்கு தாக்கல்!

மன்னார், ஒக். 13

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில், இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்துநிறுத்தக் கோரி மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நானாட்டான் பிரதேச சபை தவிசாளரரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில், அவரின் சார்பில் சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் எம். பி. தலைமையிலான சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகினர்.

இந்த வழக்கு எதிர்வரும் 29ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

கல்வி tv CHANNEL-1

**13.10.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**13.10.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu ஈழநாடு
13.10.2021 புதன்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 27

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## சீன சார்பு?

இலங்கையின் முன்னாள் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க ஒரு முறை கூறியிருந்தார். நாடு எரிமலையின்மீது இருக்கின்றது. எப்போது வேண்டுமானாலும் எரிமலை வெடித்து - நாடு சின்னாபின்னமாகலாம். இதனை இப்போது தனது கருத்தாக பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். சீன சார்பு ஆட்சியாளர்கள் உருவான நாளிலிருந்து, நாடு ஆபத்துக்குள் தள்ளப்பட்டுவிட்டதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார் . விஜயதாஸ ராஜபக்ஷ ஆளும் பொதுஜன பெரமுனவில் அங்கம் வகித்துக் கொண்டே, அரசாங்கத்தை தொடர்ச்சியாக விமர்சித்துவருகின்றார். உண்மையில் அவர் அரசாங்கத்தை விமர்சிக்கின்றார் என்பதை விடவும் ராஜபக்ஷக்களை விமர்சிக்கின்றார் என்று புரிந்து கொள்வதுதான் சரியானது.

தற்போதிருக்கும் ஆட்சியாளர்களில் எவர் சீன சார்புள்ளவர்கள் என்பதை துல்லியமாகக் கணிப்பது சற்று கடினம்தான். ஆனால், மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில்தான், சீனாவிற்கும் இலங்கைக்குமான தேனிலவு ஆரம்பித்தது. அந்த தேனிலவின் விளைவாகவே சீனாவின் உள்நுழைவு ஏற்பட்டது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின்போது, எப்படியாவது, யுத்தத்தில் வெற்றிபெற்றுவிட வேண்டுமென்னும் தீராத ஆசையின் காரணமாக, மஹிந்த ராஜபக்ஷ சீனாவின் கதவை மீண்டும் மீண்டும் தட்டினார். கதவும் அவர் தட்டியபோதெல்லாம் திறந்தது.

இந்தியாவும் அமெரிக்காவும் பல்வேறு காரணங்களால் ஆயுத உதவிகளை வழங்குவதற்கு தயங்கியமையை, சீனா துல்லியமாகக் கணிப்பிட்டு பயன்படுத்திக் கொண்டது. இந்தப் பின்புலத்தில்தான் சீனாவின் பிடியிலிருந்து இலகுவாக கொழும்பு மீள முடியாத நிலைமை ஏற்பட்டது. இதன் விளைவாகவே இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அனைத்தும் கொழும்புடன் அன்னியோன்யமான உறவில் இருக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

இப்போது சீன சார்பு என்பது இலங்கையின் அரசியிலில் தவிர்க்க முடியாத ஒரு கட்டத்தை அடைந்துவிட்டது. காரணம் சீனாவின் பாரிய முதலீட்டுத் திட்டங்கள் இலங்கைக்குள் இருக்கின்றன. இந்த நிலையில் கொழும்பு விரும்பினாலும்கூட, ஒரு கட்டத்திற்கு மேல், சீனாவிலிருந்து அதிகம் விலகிச் செல்ல முடியாது. அதேவேளை, என்னதான் இந்தியாவுடனும் அமெரிக்காவுடனும் உறவில் இருந்தாலும், இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரத்தை மேற்குலகம் கையிலெடுத்தால், அப்போது கொழும்புடன் முற்றிலுமாக நிற்கக் கூடிய நண்பன் சீனா மட்டும்தான். ஏனெனில், சீனா மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விழுமியங்களுக்கு முக்கியத்துவமளிக்காத ஒரு நாடு. உலகெங்கும் மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபடுவோர்களை, தலையிடாக் கொள்கை என்னுமடிப்படையில், பாதுகாக்கும் பணியையே சீனா நுட்பமாக மேற்கொண்டு வருகின்றது. இந்த விடயங்களையும் துல்லியமாகக் கணித்தே ராஜபக்ஷக்கள் செயல்படுவர். ஒருவேளை ஆட்சி மாறினால் இந்த கண்ணோட்டத்தில் மாற்றங்கள் ஏற்படலாம்.

இப்போது பிறிதொரு விடயமும் மெதுவாகத் தலைநீட்டுகின்றது. அதாவது, தாராளவாத ஜனநாயக மறுப்பு, சீனாவுடன் உறவுகளை வைத்துக் கொள்ள வேண்டுமென்று, தமிழ்த் தேசிய பரப்பிலுள்ளவர்கள் சிலரும் முயற்சிக்கின்றனரென இந்தியாவின் பிரபலமான ஆங்கில ஊடமொன்றில் செய்தி வெளியாகிருக்கின்றது. இந்திய புலனாய்பு அமைப்பை மேற்கோள் காட்டியே குறித்த செய்தி வெளியாகியிருக்கின்றது.

இங்கிலாந்திலுள்ள ஈழத் தமிழ் புலம்பெயர் அமைப்பொன்று இப்படியான கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டதாகவே, குறித்த புலனாய்வு செய்தி அமைந்திருக்கின்றது. அதாவது, இந்தியா தொடர்ந்தும் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு உதவாது விட்டால், சீனாவுடன் தொடர்புகளை ஏற்படுத்தலாம் - என்று, குறித்த புலம்பெயர் குழுவினர் ஆலோசித்திருப்பதாக அந்த செய்தி கூறுகின்றது. இந்திய எதிர்ப்பு நிலையில் சீனாவை அணுகினால், சீனாவும் தமிழர்களின் முன்னெடுப்பை ஆதரிக்கலாம் என்று சிலர் கருதுகின்றனரெனத் தெரிகின்றது.

யாழ்ப்பாணத்தில் சீன நிறுவனம் ஒன்று, கடலட்டை வளர்ப்பில் ஈடுபடுவதை கூட்டமைப்பினர் எதிர்த்தவேளையில், சீனாவை எதிர்ப்பது தவறு என்னுமடிப்படையில் கருத்துருக்களை சிலர் முன்வைக்க முயற்சித்தமையையும் காண முடிந்தது. தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி சர்வதேச உறவுகளை கையாள முற்படும் போது மிகுந்த அவதானம் தேவை. ஒரு தவறான அணுகுமுறை, தற்போது ஓரளவு தமிழர்கள் மீதிருக்கும் சர்வதேச கவனத்தையும் துடைத்தழித்துவிடலாம்.

தமிழ் மக்களின் நலன் தொடர்பில் சிந்திக்கும் தமிழ்த் தேசிய தரப்பினர், தமிழ் நிலை அரசியல் அவதானிகள், கருத்துருவாக்கிகள் இதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

# கூட்டமைப்புக்கு தலைமைத்துவமல்ல ஒற்றுமையே காலத்தின் தேவை!

- அலசுவது இராஜதந்திரி -

*இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு “பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காக மாறிய” நிலையில் காணப்படுகின்றது.*

*2001ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாடுகளுக்குப் பக்க பலமாக இருக்க முடியுமென்ற எதிர்பார்ப்புடனேயே தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆரம்பம் அமைந்திருந்தது.*

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமக்கென ஒரு நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டிருந்தனர். அப்போது, தமிழ் அரசியல் தரப்பில் முன்பு தமிழீழ விடுதலைப் புலிகளால் இலக்கு வைக்கப்பட்ட வடக்கு - கிழக்கின் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மட்டுமல்ல. முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் தமிழீழ விடுதலைப் புலிகளை கிளிநொச்சியில் சந்தித்து நல்லிணக்கத்துக்கான சமிக்ஞைகளை வழங்கியிருந்தனர்.*

*எது எப்படியிருந்தபோதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியாக தவறிழைத்து தமது முடிவைத் தேடிக்கொண்டனர். இருப்பினும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஓர் அரசியல் பிரதிநிதித்துவத்தை வழங்குவதில் ஒத்துழைப்பை வழங்க முடியும் என்று எதிர்பார்க்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தற்போது ஆட்டம் கண்ட நிலையிலிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.*

*இத்தகைய சூழ்நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தற்போதைய தலைவரான இராஜவரோதயம் சம்பந்தனுக்குப் பின்னர் தம்மால் தலைமைத்துவத்தை வழங்க முடியுமென்று யாழ்ப்பாண மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.*

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் நடவடிக்கைகளைப் பொறுத்தவரை வடக்கு - கிழக்கில் எந்தவோர் ஆக்கபூர்வமான நடவடிக்கையும் முன்னேற்றகரமாக எடுக்கப்படாதிருக்கின்றது.*

*நல்லாட்சி என்ற அரசை வடக்கு - கிழக்கு மக்களை அணி திரட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தென்னிலங்கையில் ஸ்தாபித்திருந்தது. ஆனால், நல்லாட்சி அரசாங்கத்தின் கதாநாயகர்களான அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவரது பிரதம மந்திரியாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு பலப்படுத்தப்பட்ட நல்லாட்சி அரசாங்கத்தில் தமது சொந்த அரசியல் நலன்களை பாதுகாத்துக் கொண்டனரே தவிர, வடக்கு - கிழக்கு மக்களின் அரசியல் அபிலாசைகளை எவ்விதத்திலும் பூர்த்தி செய்யவில்லை.*

*இந்நிலையில் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்டம் கண்டதாகவும் அதில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையோடு முரண்பட்ட போக்கிலுள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது.*

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை அதன் தலைவரும் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனுக்குப் பின்னர் கூட்டமைப்புக்கு தம்மால் தலைமத்துவத்தை வழங்க முடியும் என்று யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். ஏற்கனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பில் அங்கம் வகிக்கின்ற கட்சிகள், எம். ஏ. சுமந்திரனுடன் பகைமை பாராட்டும் போக்கை கொண்டுள்ளன.*

*சில தினங்களுக்கு முன்னர் கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தமது வயல் நிலத்தை காளை மாடுகள் பூட்டி ஏர் கொண்டு தாமே உழுகின்ற காட்சியை தமது முகநூலில் பதிவேற்றியிருந்தார்.*

*இதனை பார்வையிட்ட அவர் மீது அதிருப்தி கொண்டுள்ள அரசியல்வாதிகள் எம். ஏ. சுமந்திரன் அரசியலுக்கு வராது ஒரு கமக்காராராகவே இருந்திருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிரச்னைகள் வந்திராது என்றுகூட வேடிக்கையாகக் கூறியிருந்தனர்.*

*வடக்கு - கிழக்கு மக்களைப் பொறுத்தவரை மத மற்றும் பிரதேச ரீதியான வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரு நேர்மையாளனே தமது அரசியல் நிலைப்பாடுகளுக்கு தலைமை ஏற்க வேண்டும் என்பதை எப்போதும் விரும்பியவர்களாக இருக்கின்றனர். இதன் காரணமாகவே தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக இருந்த எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஒரு கிறிஸ்தவராக இருந்தபோதிலும் இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட யாழ்ப்பாணத்தின் காங்கேசன்துறை தொகுதியில் ஒரு தன்னிகரற்ற தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தார். கூடவே, தந்தை செல்வா அரசியலில் ஈடுபட்ட காலங்களில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம் மக்களாலும் நேர்மையான தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தார்.*

*ஆனால், இன்று “கழுதை தேய்ந்து கட்டெறும்பானது” போல தமிழ் அரசுக் கட்சியின் நிலை காணப்படுவதோடு வடக்கு - கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் “ஒற்றுமையின்றேல் தாழ்வு“ என்பதை மனதில் கொள்ள வேண்டிய நிலையிலும் இருக்கின்றது.*

*இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தம்மால் இரா. சம்பந்தனுக்குப் பின்னர் தலைமைத்துவத்தை வழங்க முடியும் என்று மார்தட்டுவதைவிட கூட்டமைப்பின் ஒற்றுமையை தம்மால் கட்டிக்காக்க முடியுமென்று எம். ஏ. சுமந்திரன் கூறுவதே சாலப்பொருத்தமானதாக இருக்க முடியும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஒக்ரோபர் - 13 புதன்கிழமை
பிலவ வருடம் - புரட்டாதி 27
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : அஷ்டமி




13.10.2021

**மேடம்**
பதவியில் மாற்றம் வரும். மனதில் நிம்மதி அதிகரிக்கும். பிறர் வம்புகளில் தலையிடாமல் இருப்போருக்கு பிரச்னை இல்லை. குடும்பத்தில் நிலவி வந்த பிரச்னைகள் படிப்படியாக மாறும்.

**இடபம்**
பணியில் கவனம் அதிகரிக்கும். வம்புகளில் ஈடுபட வேண்டாம். யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம். கடன் வாங்காதீர்கள். எதிர்ப்புகள் பற்றி இருந்து வந்த பயம் நீங்கும்.

**மிதுனம்**
சுபநிகழ்வு பற்றிய பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். குடும்பத்தில் சுப விசேஷத்துக்கான முன்னேற்பாடு நடைபெறும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். மனக்குழப்பம் நீங்கும்.

**கடகம்**
வருமானம், சேமிப்பு பற்றி கவலைப்பட வேண்டாம். இட மாற்றம், வீடு மாற்றம் ஏற்படலாம். மனதில் தெளிவு உண்டாகும். புதிய விஷயம் கற்கும் ஆர்வம் வரும். தோற்றத்தில் பொலிவு கூடும்.

**சிம்மம்**
பழைய நட்பை புதுப்பித்துக் கொள்வீர்கள். கலகலப்பான நாள். குழந்தைகளுடன் நிறைய நேரம் செலவிட அவகாசம் கிடைக்கும். வேலைப்பளு குறைவதற்கான வாய்ப்புகள் கிடைக்கும்.

**கன்னி**
சேமிப்பு, வருமானம் பற்றிய அக்கறை கூடுதலாகும். இலத்திரனியல் சாதனங்கள் வாங்குவீர்கள். மனதில் இருந்த பயம் தீரும். சிறுபழுதுகள் காரணமாகச் சில செலவுகள் வரலாம்.

**துலாம்**
கருணை காரணமாக இன்று நல்ல விஷயங்களை செய்வீர்கள். சருமம் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் அகலும். கவர்ச்சி கூடும். அழகுணர்ச்சியுடன் சில செயல்களை செய்து மகிழ்வீர்கள்.

**விருட்சிகம்**
உங்களின் செல்வாக்கு கூடும். அலங்கார சாதனங்கள் வாங்குவீர்கள். செலவுகளைக் கட்டுப்படுத்தும் எண்ணம் தோன்றும். வெளியூரிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் நல்ல செய்தி வரும்.

**தனுசு**
நேர விரயத்தை கட்டுப்படுத்துவீர்கள். கற்பனை பயம் வேண்டாம். உறவினர்கள் இடையே பாலமாக இருப்பீர்கள். நிதானப்போக்கு இருக்கும். தன்னிம்பிக்கை கூடும். உடல் உழைப்பு அதிகரிக்கும்.

**மகரம்**
குழந்தைகளுக்கும், தந்தைக்கும் இன்று நன்மை வரும். திருமண வாய்ப்பு கைகூடும். மனதில் இருந்த கவலைகள் தீரும். வீடு விற்பனை, வாடகை மூலம் வருமானம் வரும்.

**கும்பம்**
மனதில் தெளிவு பிறக்கும். ஆன்மிகப் பணியில் ஈடுபாடு உண்டாகும். பணப்புழக்கம் அதிகரிக் கும். குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும். உறவினர்களிடம் எதிர்பார்த்த அளவு அன்பு கிடைக்காது.

**மீனம்**
பாராட்டு கிடைக்கும். தடைகளும் தாமதங்களும் நீங்கும். பகையை வெல்லக்கூடிய ஆற்றல் உங்களுக்கு வரும். பலகாலம் எதிர்பார்த்திருந்த நல்ல விஷயம் ஒன்று நடைபெறும்.

# பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் சீமானை கைது செய்ய வேண்டும்

## காங்கிரஸ் கட்சி பொலிஸில் முறைப்பாடு





சென்னை, ஒக். 13

நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமானை பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைதுசெய்ய வேண்டும் என்று காங்கிரஸ் சட்டமன்ற குழு தலைவர் செல்வப்பெருந்தகை , கரூர் மக்களவை உறுப்பினர் ஜோதிமணி ஆகியோர் நேற்று சென்னையில் பிரதி பொலிஸ் அதிபர் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

பின்னர் பத்திரிகையாளர்களை சந்தித்த காங்கிரஸ் சட்டமன்றக் குழுத் தலைவரான செல்வப் பெருந்தகை, "சீமான் காங்கிரஸ் கட்சித் தலைவர்களை இழிவுபடுத்துவது தொடர்கிறது. அவர் வாங்குகிற கூலிக்கு சரியாக வேலை பார்க்கிறார் என்று தோன்றுகிறது. உள்துறை இணை அமைச்சரின் மகன் கார் ஏற்றி விவசாயிகளை படுகொலை செய்கிறார். அதுபற்றி சீமான் வாயைத் திறக்க மாட்டேன்கிறார்.

காங்கிரஸ் நாடு முழுவதும் விவசாயிகளுக்காக போராடுகிறது. ஆனால், காங்கிரஸை அவர் இழிவுபடுத்துகிறார். இந்திரா காந்தி குடும்பத்தைப் பற்றி பேச சீமானுக்கு எந்த தகுதியும் இல்லை. இதைத் தொடர்ந்தால் விளைவுகள் வேறு மாதிரி இருக்கும்" என்றார் செல்வப் பெருந்தகை.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி, "தமிழகத்தில் வன்முறையையும் பயங்கரவாதத்தைத் தூண்டிவிடும் வகையில் சீமானும் அவரால் ஏவிடப்பட்டவர்களும் தொடர்ந்து பேசி வருகிறார்கள். கன்னியாகுமரியில் நடந்த கூட்டத்தில் தமிழகத்தில் மீண்டும் மனித குண்டு படுகொலைகள் நடக்கும் என்பது போலவும், அதற்கு நாம் தமிழர் இளைஞர்கள் தயாராக இருக்க வேண்டும் என்பது போலவும் சீமான் முன்னிலையில் சாட்டை முருகன் பேசியிருக்கிறார். என்று கூறினார் ஜோதிமணி.

# கொத்து கொத்தாய் செத்து ஒதுங்கிய மீன்கள்



இராமநாதபுரம், ஒக். 13

தமிழகத்தில் கீழக்கரை முதல் ஏர்வாடி வரை கொத்து கொத்தாய் செத்து கடற்கரையில் நேற்று முன்தினம் ஏராளமான மீன்கள் கரை ஒதுங்கி கிடந்தன. கடல்நீர் நிறம் மாறியது இதற்கு காரணமா? என ஆய்வு நடந்து வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டம் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் ஆண்டுதோறும் செப்டெம்பர் முதல் அக்டோபர் மாதம் வரையிலும் பூங்கோறை என்று சொல்லக்கூடிய ஒரு விதமான பச்சைப்பாசிகள் இனப்பெருக்கத்திற்காக கடல் நீரில் முழுமையாக படர்ந்து விடும். இந்த பச்சை பாசியால் கடல்நீர் பச்சை நிறமாக மாறிவிடும்.

தற்போது கீழக்கரை, ஏர்வாடி கடல் பகுதியில் கடந்த 2 நாட்களாகவே பச்சை பாசிகள் படர்ந்துள்ளன. இந்தநிலையில் கீழக்கரை முதல் ஏர்வாடி வரையிலான கடற்கரை பகுதியில் ஏராளமான மீன்கள் செத்து கரை ஒதுங்கி கிடந்தன. குறிப்பாக கீழக்கரை துறைமுக பாலம் அருகே உள்ள கடற்கரை பகுதியில் சுமார் 2 கிலோமீற்றர் தூரத்திற்கு ஓரா, நகரை, கிளி மீன், கணவாய், விளை மீன், நெத்தலி, அஞ்சாலை உள்ளிட்ட பல வகையான மீன்கள் கொத்து கொத்தாய் கரை ஒதுங்கி கிடந்தன.

இதுகுறித்து தகவல் அறிந்ததும் வருவாய்த்துறை அதிகாரிகள் அங்கு சென்று ஆய்வு செய்தனர். அப்போது இறந்து கிடந்த மீன்கள் மற்றும் நிறம் மாறிய கடல் நீரை ஆய்வுக்காக சேகரித்து சென்றனர். இதுபற்றி கடல் மீன் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி ஒருவர் கூறுகையில், பச்சை பாசிகள் கரையோர கடல் பகுதியில் அதிக அளவில் படர்ந்திருந்த காரணத்தால் மீன்கள் சுவாசிப்பதற்கு தேவையான ஒட்சிசன் கிடைக்காமல் இறந்து கரை ஒதுங்கி இருக்கலாம் என்றார்.

# தமிழக உள்ளூராட்சிமன்ற தேர்தல் முடிவு; பல இடங்களிலும் தி.மு.க. முன்னணியில்

சென்னை, ஒக். 13

தமிழகத்தில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, நெல்லை, தென்காசி ஆகிய 9 மாவட்டங்களில் கடந்த 6, 9 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக ஊரக உள்ளாட்சி தேர்தல் நடந்தது. இந்நிலையில் நேற்று காலை 8.00 மணி முதல் வாக்கு எண்ணும் பணி தொடங்கியது.

நேற்று மாலை வரை வெளியான முடிவுகளின்படி பெரும்பாலான பகுதிகளை தி.மு.க. கைப்பற்றி முன்னணியில் உள்ளது. அ.தி.மு.க. எதிர்பாராத பின்னடைவைச் சந்தித்திருப்பதை முதலில் கிடைக்கும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

இந்நிலையில், வாக்கு எண்ணிக்கையில் முறைகேடுகள் நடக்க வாய்ப்புள்ளதாகக் கூறி, வாக்கு எண்ணிக்கை முழுவதையும் காணொலி பதிவு செய்ய உத்தரவிடக் கோரி, திரிசூலம் பஞ்சாயத்துத் தலைவர் பதவிக்கும், வட்டார உறுப்பினர் பதவிக்கும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலர் பதவிக்கும் போட்டியிட்ட சரஸ்வதி, சத்தியநாராயணன், முத்துக்கனி ஆகியோர் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

அப்போது நீதிபதிகள் கூறுகையில், "வாக்கு எண்ணிக்கை ஏற்கெனவே தொடங்கிவிட்டது. உள்ளாட்சி தேர்தல் வாக்கு எண்ணிக்கையை முறையாக நடத்த தேர்தல் ஆணையம் உரிய நடவடிக்கை எடுக்கும் என நம்புகிறோம். வாக்கு எண்ணிக்கையை காணொலி பதிவு செய்யக் கோரிய வழக்குகளுக்கு மாநில தேர்தல் ஆணையம் பதிலளிக்க வேண்டும்" என்று அவர்கள் உத்தரவிட்டனர்.

## பஸ் கட்டணமும் உயருமா?

கொழும்பு, ஒக். 13

அத்தியாவசியப் பொருள்கள் பலவற்றின் விலைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் பஸ் கட்டணம் அதிகரிக்குமா என்பது தொடர்பில் பயணிகளிடையே அச்சம் காணப்பட்டது.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை கருத்து வெளியிட்ட போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, பஸ் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பில் அவ்வாறானதொரு முடிவை இன்னும் எடுக்கவில்லை என்று கூறினார்.

பஸ் கட்டணங்கள் அதிகரிப்பதற்கு தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றன. எனினும் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

## எரிபொருள் விலையை அதிகரிக்குமாறு கோருகின்றது லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம்

கொழும்பு, ஒக். 13

தங்களது விநியோக நிலையங்கள் ஊடாக வழங்கப்படும் எரிபொருள்களின் விலைகளை அதிகரிக்குமாறு லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, ஒரு லீற்றர் டீசலின் விலை 25 ரூபாயாலும், ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 16 ரூபாயாலும் அதிகரிக்குமாறு அந்த நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.

உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரிப்பின் காரணமாக இலங்கையிலும் விலை அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டுமென அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் எரிபொருள் விற்பனை நடவடிக்கையில் ஈடுபடுவதால் தமது நிறுவனத்துக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# எரிபொருள் விலைகளில் உடனடி மாற்றம் இல்லை

### அரச உயர்மட்டம் தீர்மானம்

கொழும்பு, ஒக்.13

**அத்தியாவசிய பொருள்கள் பலவற்றின் விலைகளை சடுதியாக அதிகரித்த அரசின் முடிவு சமூகத்தில் கடும் விமர்சனங்களுக்குள்ளாகியுள்ள நிலையில், எரிபொருள்களின் விலைகளிலும் உடனடி அதிகரிப்பை செய்யாதிருக்க அரசு தீர்மானித்துள்ளது.**

இதன்படி வரவு-செலவுத் திட்ட அறிவிப்புவரை எரிபொருள் விலைகளில் மாற்றங்களை செய்யாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் அத்தியாவசியப் பொருள்களை விலை அதிகரிப்பு தொடர்பில் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கூடிய அமைச்சரவை விரிவாக ஆராய்ந்துள்ளது.

அத்தியாவசிய பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு குறித்து இங்கு அமைச்சர்கள் பலர் சுட்டிக்காட்டினர். ஒரேயடியாக இவ்வாறு அதிகரிப்பை செய்வது மக்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்துமென இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

(அ)

## ஓர் அலகு மின்சார உற்பத்தி செலவு 4 ரூபாயினால் அதிகரிக்கும் சாத்தியம்!

கொழும்பு, ஒக். 13

சர்வதேச சந்தையில் நிலக்கரியின் விலை வேகமாக அதிகரிப்பதால் நாட்டில் ஓர் அலகு மின்சார உற்பத்தி செலவு 4 ரூபாயினால் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் ஒரு மெற்றிக் தொன் நிலக்கரியின் விலை 200 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

இலங்கையின் மொத்த மின் உற்பத்தியில் 40 சதவீதம் நிலக்கரியை கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த ஆண்டுக்கு தேவையான நிலக்கரி ஏற்கெனவே, இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொதுமுகாமையாளர் எம்.ஆர். ரணதுங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும் சர்வதேச சந்தையில் நிலக்கரியின் விலை அதிகரித்துள்ளமையினால், அடுத்த ஆண்டு மின்சார உற்பத்திக்கான செலவு அதிகரிக்கக்கூடும் என அவர் சுட்டிக் காட்டினார்.

இதனடிப்படையில் ஒரு அலகு மின்சார உற்பத்திக்கான செலவு 4 ரூபாயினால் அதிகரிக்கக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டார்

கோவிட்-19 காரணமாக 45,000 மில்லியன் ரூபாய்க்கான கட்டண பட்டியல்கள் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளன.

நுகர்வோர் அவற்றை செலுத்துவதில் மேலும் தாமதமாகுவதாகவும் இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் எம்.ஆர். ரணதுங்க தெரிவித்தார்.

## கொரோனா தொற்றினால் 67 சிறுவர்கள் உயிரிழப்பு!

கொழும்பு, ஒக். 13

நாட்டில் இதுவரை 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட 69,130 சிறுவர்களுக்கு கோவிட் தொற்று உறுதியாகியுள்ளதாகக் குடும்ப நல சுகாதார பணியகம் தெரிவித்துள்ளது.

அதில் 67 சிறுவர்கள் கோவிட் தொற்றினால் உயிரிழந்தனர்.

அத்துடன், ஒரு மாதத்துக்கும் குறைவான வயதுடைய 17 சிசுக்களும், ஒரு மாதம் முதல் ஒரு வருடத்துக்கு இடைப்பட்ட வயதுடைய 17 சிசுக்களும், ஒரு வயது முதல் 5 வயதுக்கு இடைப்பட்ட வயதுடைய 13 சிறுவர்களும், 6 முதல் 12 வயதுக்கு இடைப்பட்ட 12 சிறுவர்களும், 12 முதல் 15 வயதுக்கு இடைப்பட்ட 5 சிறுவர்களும், 15 முதல் 18 வயதுக்கு இடைப்பட்ட 3 சிறுவர்களும் கோவிட் தொற்றினால் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் பரவலிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் ஊடக இணைப்பாளர் மருத்துவர் கபில ஜயரத்ன பெற்றோர்களிடம் கோரியுள்ளார்.

இதேவேளை, பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்குத் தேவையான சுகாதார வழிகாட்டி தற்போது கல்வி அமைச்சிடம் வழங்கப்பட்டுள்ளது. எனவே அந்த சுகாதார வழிகாட்டியில் குறிப்பிட்டுள்ளவாறு மாணவர்களை வழிநடத்த வேண்டும் என்று குடும்பநல சுகாதாரப் பணியகத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் விலைகள் எகிறினால் பஸ் கட்டணமும் உயர்த்தப்படும்!

கொழும்பு, ஒக். 13

எரிபொருள் விலை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டால் பஸ் கட்டணம் அதிகரிக்கப்படும் என பஸ் சங்கம் எச்சரித்துள்ளது.

தற்போதைய காலப்பகுதியில் பேருந்துத்துறை பாரிய சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளதாக பஸ் சங்கம் தெரிவித்துள்ளது. எரிபொருள் விலை அதிகரிக்கும் அவதானம் உள்ளமையினால் எதிர்வரும் நாள்களில் பேருந்து கட்டணத்திலும் திருத்தம் மேற்கொள்ள நேரிடும் என இலங்கை தனியார் பஸ் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

இதுவரை 30 வீதம் மாத்திரமே பஸ்கள் இயங்குகின்றன. பஸ்களுக்கான மேலதிக பாகங்கள் மற்றும் ரயர்களின் விலைகள் பாரியளவு அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## தனியார்துறை ஊழியர் ஓய்வு பெறும் வயதை 60 ஆக அதிகரிக்கும் யோசனைக்கு அங்கீகாரம்

கொழும்பு, ஒக். 13

தனியார்துறை ஊழியர்கள் ஓய்வுபெறும் வயதெல்லையை 60 ஆக அதிகரிப்பதற்கான சட்டத் திருத்தத்தை பாராளுமன்றில் சமர்ப்பிக்க அமைச்சரவை அங்கீகாரம் அறிவித்துள்ளது.

கடந்த மார்ச் 23 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போது தனியார்துறையினரின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதெல்லையை அதிகரிப்பதற்கான சட்டவரைவு ஒன்றை தயாரிக்க அனுமதியளிக்கப்பட்டது.

இந்நிலையில், தனியார்துறை ஊழியர்கள் ஓய்வுபெறும் குறைந்தபட்ச வயதில் திருத்தம் மேற்கொள்ளும் சட்டமூலத்தை பாராளுமன்றில் சமர்ப்பிக்க தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை நேற்று முன்தினம் அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது தனியார்துறை ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதெல்லை 55 ஆக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலை கப்பல்துறையில் எரிபொருள் கொள்கலன் விபத்து



திருமலை, ஒக். 13

திருகோணமலையில் அமைந்துள்ள இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்திலிருந்து எரிபொருள் ஏற்றிச்சென்ற எரிபொருள் கொள்கலன் ஒன்று நேற்று அதிகாலை 4 மணியளவில் கப்பல்துறை எனும் பகுதியில் விபத்துக்குள்ளானது.

வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளான குறித்த வாகனம், வீதியின் அருகிலுள்ள பாலம் ஒன்றினையும் உடைத்துக்கொண்டு திருகோணமலை - கண்டி பிரதான வீதியில் தடம் புரண்டுள்ளது.

விபத்துக்கான காரணம் இன்னும் அறியப்படாத நிலையில் சாரதி தூக்க கலக்கத்தில் இருந்திருக்கக்கூடும் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

விபத்தில் குறித்த வாகனத்தில் பயணித்த சாரதி பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# யாழ்.மாநகர முதல்வரை சந்தித்த கனடா தூதுவர்

யாழ்ப்பாணம், ஒக். 13

இலங்கைக்கான கனடா தூதுவர் டேவிட் மக்னன் யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இந்த சந்திப்பு நேற்று யாழ். மாநகர சபையில் இடம்பெற்றது. இதன்போது யாழ். மாநகர முதல்வரினால் தூதுவருக்கு நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

இந்த சந்திப்பில் யாழ். மாநகர ஆணையாளர் இ.ஜெயசீலனும் கலந்து கொண்டார். (அ)

# மக்களின் எதிர்ப்பார்ப்பை புறந்தள்ளி வெற்றிகரமாக பயணிக்க முடியாது

## சுட்டிக்காட்டுகின்றார் அமைச்சர் விமல்



கொழும்பு, ஒக். 13

**மக்கள் அரசாங்கத்தின்மீது வைத்துள்ள நம்பிக்கையை புறந்தள்ளி செயல்பட்டால், வெற்றிகரமான பயணத்தை ஒரு போதும் மேற்கொள்ள முடியாது என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**

**கட்டுபெத்த பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே அவர் இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கமானது இந்த இரண்டு வருட பயணத்தில் பெரும் சவால்களுக்கு முகம் கொடுத்தே பயணித்துக் கொண்டிருக்கிறது.

இந்தக் காலக்கட்டத்தில் நாம் செய்த தவறுகள் என்ன, குறைப்பாடுகள் என்ன, எந்த இடத்தில் பிழை நேர்ந்தது என்பதை சரியாக ஆராய்ந்து பயணித்தால், அடுத்த மூன்று வருடங்களில் மக்களின் அபிமானத்தை மீண்டும் எம்மால் பெற்றுக் கொள்ள முடியுமாக இருக்கும்.

ஆனால், இந்தப் பயணத்தை நாம் உறுதியாக மேற்கொள்ள வேண்டும். மக்களின் அபிலாசைகளை நிவர்த்தி செய்யக் கூடிய வகையில் எமது பயணம் அமைந்திருக்கவேண்டும்.

இதனை நாம் தவறவிட்டால், ஒருபோதும் எம்மால் எமது பயணத்தை வெற்றிகரமாகக் கொண்டு செல்ல முடியாது.

மக்களின் வாழ்வாதாரச் சிக்கலைக் குறைத்து, தேசிய பாதுகாப்பை இன்னமும் பலப்படுத்த வேண்டும் என்பதையே மக்கள் எம்மிடம் எதிர்ப்பார்த்தார்கள்.

இந்த எதிர்ப்பார்ப்பை நாம் விளையாட்டாக கருதக்கூடாது. அதனைப் புறந்தள்ளி செயற்படவும் கூடாது - என்றார். (அ)

# நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு 10 இலட்சம் இளைஞர்கள் திட்டம்

கொழும்பு, ஒக். 13

எதிர்வரும் மாதங்களில் கிட்டத்தட்ட 10 இலட்சம் இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேற உள்ளனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களிடம் பேசிய அவர், 1983 கலவரத்தின் போது அல்லது யுத்தத்தின் போது கூட இவ்வளவு பெரிய எண்ணிக்கையிலானவர்கள் நாட்டை விட்டு வெளியேறவில்லை.

இளைஞர்கள் தங்கள் எதிர்காலத்தை வலுப்படுத்துவதற்காக கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு செல்வதற்கு திட்டமிட்டுள்ளனர். இந்த வளர்ச்சி ஏமாற்றமளிக்கிறது. நாட்டின் இளைஞர்களின் எதிர்காலத்துக்காக தற்போதைய சவால்களை எதிர்கொள்ளவேண்டும்.

நாட்டின் வருங்கால சந்ததியினர் நாட்டை வளர்ப்பதற்கும் தலைமைத்துவத்தை வழங்குவதற்கும் கைகோக்கவேண்டும்- என்றார். (அ)

# ஏழாலையில் போதை மாத்திரை விற்பனை செய்த ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 13

ஏழாலையில் வீட்டில் வைத்து போதை மாத்திரைகளை விற்பனை செய்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

6 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட பெறுமதியுடைய 9 ஆயிரத்து 60 மாத்திரைகள் சந்தேகநபர்களிடம் கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

ஏழாலையைச் சேர்ந்த 38 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழான தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.



# பெரிய வெங்காயத்தின் விலையும் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 13

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயம் 150 ரூபாய் வரை அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்துக்காக 40 ரூபாய் வரி விதிக்கப்பட்டதே இதற்கு காரணமாகும்.

அவ்வாறு இறக்குமதி வெங்காயத்தின் மீதான வரி தாக்கம் உள்நாட்டு வெங்காயத்தின் கேள்வியை அதிகளவில் அதிகரிக்கச் செய்ததன் காரணமாக இவ்வாறு விலையும் உயர்ந்துள்ளது.

இந்நிலை தொடருமானால் இன்னும் ஒரு வாரத்தில் 200 ரூபாய் வரை வெங்காயத்தின் விலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# வடக்கு பாடசாலை மாணவர்களுக்கு 21ஆம் திகதி முதல் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், ஒக். 13

வடக்கு மாகாணத்தில் பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணிகள் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இது தொடர்பிலான அறிவித்தல் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனால் வெளியிடப்பட்டுள்ளது.


இது குறித்து அவர் தெரிவிக்கையில்-

பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் செயற்பாடு முதற்கட்டமாக 15 தொடக்கம் 19 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

பைசர் தடுப்பூசியை ஒரு தடவை மட்டும் செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் தடுப்பூசி செலுத் தும் பணிகள் முன்னெடுக்கப்படும்.

முதலில் 19 வயதுடைய மாணவர்களுக்கும் அதன் பின்னர் 18 என்ற அடிப்படையில் 17, 16, 15 என கட்டம் கட்டமாக தடுப்பூசிகள்



செலுத்தப்படும்.

மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகள் ஊடாக தடுப் பூசிகள் செலுத்தப்படும்.

குறித்த வயதுகளையுடைய பாடசாலை கலிவிருந்து இடை விலகியவர்கள் தமது பகுதி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் ஊடாக தடுப்பூசிகளைச் செலுத்திக்கொள்ள முடியும் - என்றார்.

# மாகாணங்கள் இடையே பயணிக்கும் பஸ்கள்மீது கடுமையான நடவடிக்கை

கொழும்பு, ஒக். 13

மாகாணங்களுக்கு இடை யில் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

வைத்தியசாலை ஊழியர்க ளின் போக்குவரத்துக்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களைத் தவறாக பயன்படுத்தி இவ்வாறு சிலர் போக்குவரத்தில் ஈடுபடுவதாக அவர் சாடியுள்ளார்

பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தாலும் வைத்தியசாலை ஊழியர்களுக்காக மாகாணங்களுக்கு இடையில் பயணிப்பதற்காக 17 பஸ்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# 7 வருடங்களுக்கு பின் 400 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டிய சதொச நிறுவனம்

கொழும்பு, ஒக். 13

லங்கா சதொச நிறுவனம் அதிகூடிய இலாபத்தை கடந்த செப்ரெம்பர் மாதம் ஈட்டியுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

7 வருடங்களுக்கு பின்னர் சதொச நிறுவனம் சுமார் 400 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சதொச வரலாற்றில் அதிகூடிய இலாபம் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் பதிவாகியுள்ளதாகவும் வர்த்தக அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மன்னாரில் 90 பாடசாலைகள் 21ஆம் திகதி ஆரம்பமாகும்

மன்னார், ஒக். 13

மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களில் உள்ள 90 பாடசாலைகள் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதென மன்னார் மாவட்ட அரச அதிபர் ஏ. ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பாடசாலைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல் தலைமையில் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் மடு கல்வி வலயத்தில் 44 பாடசாலைகள் 2,588 மாணவர்களைக் கொண்டதாகவும், மன்னார் வலயத்தில் 46 பாடசாலைகள் 3,784 மாணவர்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றன.

இந்த நிலையில் குறித்த பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாக உள்ளன.

அந்த பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் போது பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெளிவுபடுத்தினார்.

மேலும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பஸ் போக்குவரத்து தொடர்பாக அரச மற்றும் தனியார் போக்குவரத்து துறையினருடன் கலந்துரையாடி இருந்தோம்.

அதன் அடிப்படையில் யாழ்ப்பாணம், மற்றும் வவுனியாவில் இருந்து மன்னாருக்கு வரும் ஆசிரியர்களுக்காக விசேட பஸ் சேவை ஒன்றையும் ஆரம்பிக்க உள்ளமை குறித்தும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பயணம் செய்வதற்கு முறையான போக்குவரத்து சேவையை ஆரம்பிக்குமாறு அரச தனியார் போக்குவரத்துத்துறையினருக்கு ஆலோசனை வழங்கி உள்ளோம்.

எதிர்வரும் 21 ஆம் திகதி முன்பள்ளி பாடசாலைகளையும் ஆரம்பிக்க தீர்மானித்துள்ளோம் - என்றார்.

குறித்த கலந்துரையாடலில் மன்னார், மடு வலயக்கல்வி பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பொலிஸ் அதிகாரி, ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# தனி விமானத்தில் இலங்கை வந்தார் சுப்ரமணியன்சுவாமி

கொழும்பு, ஒக். 13

பாரதிய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவரும், முன்னாள் அமைச்சருமான சுப்ரமணியன் சுவாமி, தனி விமானத்தில் நேற்று காலை கொழும்பை வந்தடைந்தார்.

விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ. சானக மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் ஆகியோர், சுப்ரமணியன் சுவாமியை வரவேற்றனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், அலரிமாளிகையில் நேற்று மாலை நடைபெற்ற நவராத்திரி விழாவிலும் சுப்ரமணியன் சுவாமி கலந்து கொண்டார். அத்துடன், இலங்கை இராணுவத்தின் 72ஆவது நிறைவையொட்டி நடத்தப்படும் இராணுவ கருத்தரங்கொன்றிலும் அவர் உரையாற்றவுள்ளார்.



# இலங்கை வந்தடைந்தார் இந்திய இராணுவ தளபதி

கொழும்பு, ஒக். 13

இந்திய இராணுவத்தின் தலைமைத் தளபதி ஜெனரல் எம்.எம்.நரவானே மற்றும் அவரது குழுவினர் உத்தியோகபூர்வ விஜயமாக நேற்று இலங்கை வந்தடைந்தனர்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய இந்திய இராணுவத்தளபதி ஜெனரல் எம்.எம். நரவானே மற்றும் திருமதி வீணா நரவானே ஆகியோரை இலங்கை இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா வரவேற்றார்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின்போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளர், வெளியுறவுச் செயலாளர் மற்றும் இலங்கை இராணுவ தளபதிகளை இந்திய இராணுவ தலைமைத் தளபதி சந்திக்க உள்ளார்.

அத்துடன், இலங்கையில் இடம்பெறும் இந்திய-இலங்கை இருதரப்பு மித்ரா சக்தி இராணுவப் பயிற்சியையும் அவர் பார்வையிடுவார்.

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு மேலும் வலுவடைய இவ்விஜயம் வழிவகுக்கும் என இந்திய இராணுவத் தளபதியின் விஜயம் குறித்து இலங்கைக்கான இந்தியத் தூதரகம் கருத்து வெளியிட்டுள்ளது.

# கொரோனா பரவலின் தாக்கம் வடக்கில் ஒக்ரோபரில் வீழ்ச்சி!

## மாகாண சுகாதார பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக்.13

**கடந்த காலங்களுடன் ஒப்புடும்போது வடக்கு மாகாணத்தில் ஒக்ரோபர் மாதத்தில் கொரோனாப் பரவலின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



கொரோனா நிலவரம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது வடக்கு மாகாணத்தில் ஒக்ரோபர் மாதத்தில் கொரோனாப் பரவலின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

வடக்கில் இதுவரை 37 ஆயிரத்து 525 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

ஓகஸ்ட்டில் 14 ஆயிரத்து 633 பேராகவும், செப்ரெம்பரில் 9 ஆயிரத்து 414 பேராகவும், ஒக்ரோபரில் 942 பேராகவும் தொற்றுப் பரவல் எண்ணிக்கை காணப்படுகின்றது.

அதேபோல, வடக்கில் இதுவரை கொரோனாப் பாதிப்பினால் 783 பேர் உயிரிழந்தனர். ஓகஸ்டில் 228 பேரும், செப்ரெம்பரில் 348 பேரும், ஒக்ரோபரில் இதுவரை 26 பேரும் உயிரிழந்தனர்.

எனவே தடுப்பூசி பெறுக்கொள்ளாதவர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதன் மூலமும் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றுவதன் மூலமும் கொரோனாப் பரவலை கட்டுப்படுத்த முடியும்-என்றார்.

# எல்லை தாண்டும் இந்திய படகுகளை கரைக்கு இழுத்துக்கொண்டு வாருங்கள்!

## கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் பருத்தித்துறை மீனவருக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 13

எல்லை தாண்டி அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய மீன்பிடிப் படகுகளை கரைக்கு இழுத்துவருமாறு கடற்றொழில் அமைச்சர் பருத்தித்துறை மீனவர்களுக்கு தொலைபேசி ஊடாக அறிவுறுத்தியுள்ளார் என பருத்தித்துறை மீனவர்கள் தெரிவித்தனர்.

எல்லைதாண்டி வந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் விவகாரத்துக்கு தீர்வு எட்டப்படும் வரையில் அரசியல் பிரமுகர்கள் எவர் வந்தாலும் அடித்து விரட்டுவோம் என்று பருத்தித்துறை முனைப் பகுதி மீனவர்கள் நேற்று முன் தினம் தொடக்கம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன் தினம் மாலை தொலைபேசி ஊடாக மீனவப் பிரதிநிதிகளைத் தொடர்புகொண்ட கடற்றொழில் அமைச்சர்,

எல்லைதாண்டி அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் இந்திய மீன்பிடிப் படகுகளை கரைக்கு இழுத்து வருமாறும் அதனால் ஏற்படும் விளைவுகளை தான் பார்த்துக் கொள்வதாகவும் கூறினார் என்று மீனவப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

# இந்திய ட்றோலர்களால் முல்லை கடலிலும் உள்ளூர் மீனவர்களின் வலைகள் அழிப்பு!

முல்லைத்தீவு, ஒக். 13

இந்திய மீன்பிடி இழுவைப் படகுகளின் ஆக்கிரமிப்பு முல்லைத்தீவு கடற்பரப்பிலும் வியாபித்துள்ளது.

குறிப்பாக கடந்த சில நாள்களாக இந்தியாவிலிருந்து வருகை தரும் மீன்பிடி ட்றோலர்கள் உள்ளூர் மீனவர்களின் வலை களை சேதப்படுத்திய சம்பவங்கள் பதிவாகி வருவதாக மீனவர் கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தமது பெறுமதிமிக்க வலைகளை இந்திய இழுவைப் படகுகள் அழித்து துண்டாடி வருகின்றன என மீனவர்கள் கூறினர்.

அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளிடம் இது தொடர்பாக முறையிட்டும் இதுவரை பலன் கிடைக்கவில்லை என மீனவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் தாமே நேரடியாக கடலுக்குச் சென்று அவர்களை கட்டுப்படுத்தவேண்டி நேரிடும் என அவர்கள் கூறியுள்ளனர்.





# நவதாராளவாத காலத்தில் ஜனநாயகபூர்வ பாடத்திட்டத்துக்கான போராட்டம்

**மகேந்திரன் திருவரங்கன்**

> **கொரொணா போன்ற நெருக்கடியான ஒரு காலப்பகுதியிலே கற்பித்தல், கற்றல் இடம் பெறும் சூழலானது மாணவர்களின் புலமை வெளிப்பாட்டில் எவ்வாறு தாக்கத்தினை ஏற்படுத்துகிறது என்பதனைப் பொதுமைப்படுத்தப்பட்ட படிமமயமாக்கப்பட்ட மதிப்பீட்டு முறைகள் கருத்தில் எடுப்பதில்லை.**

பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டமானது மாணவர்கள் தமது கல்வி, அதன் வகிபங்கு, நோக்கங்கள், தாம் பயிலுகின்ற துறை பற்றி விளங்கிக் கொள்ளுவதிலே தாக்கம் செலுத்துகிறது. பாடத்திட்டத்தின் மூலமாக (ஆதிக்கமான) கருத்தியலின் இயல்பாக்கமும், சமூக மயமாக்கமும் நிகழும் அதே வேளை, பாடத்திட்டமானது அதிகாரங்களுக்கு எதிரான செயன்முறைகளை வடிவமைப்பதற்கான ஒரு களமாகவும் உள்ளது. இதனால் பாடத்திட்டத்தை வடிவமைக்கும் பணி இலவசக் கல்வியை ஜனநாயக மயமாக்கலின் மையமாக அமைகின்றது.

நவதாராளவாதமும், பல்கலைக்கழகங்களில் இருக்கும் அதிகாரக் கட்டமைப்புக்களும் பாடத்திட்டத்தினை வடிவமைத்தலினை தொழில்நுட்ப ரீதியான ஒரு செயன்முறையாக மாற்றி வருகின்றன. மாணவர்களினதும், ஆசிரியர்களினதும், கற்பிக்கப்படும் கல்விச் சாலைகளினதும் சமூக உலகங்களுக்கு கலைத்திட்டம் எவ்வாறு அர்த்தமுள்ளதாக இருக்கின்றது என்பது பற்றிப் பல்கலைக்கழகங்களினுள்ளே உரையாடல்கள் குறைந்து செல்லுவதனாலும், மாணவர்களின் புலமையினை நாம் குறைத்து மதிப்பிடுவதனாலும், கலைத்திட்டத்தினை வடிவமைத்தலில் ஜனநாயகத் தன்மை குறைகின்றது.

**மாணவனும் கலைத்திட்டமும்**

கல்வித் தளங்களிலும், பரந்த சமூகத்தினுள்ளும் மாணவர்கள், ஆசிரியர்கள் வகிக்கும் இடம், அங்கு நிலவும் சமூக உறவுகள், நாம் உருவாக்க விரும்பும் சமூகம் பற்றிய எமது பார்வை போன்றன பாடத்திட்டத்திட்டம் தொடர்பான எமது உரையாடல்களை வடிவமைக்க வேண்டும். சிலவேளைகளில் மிகவும் நவநாகரிகத்தன்மை மிக்கதாகக் கருதப்படும் விடயங்களுக்கு அவசரமாக நாம் முன்னுரிமை வழங்குகின்றோம். மறுபுறத்தில், பாரம்பரியத்தைப் பேணுதல் என்ற கோசத்துடன், பொருத்தமற்றதாகிவிட்ட விடயங்களை அகற்றுவதற்குத் தயங்குகிறோம். அறிவுசார் ஆர்வம், படைப்பாற்றல், விமர்சன செயற்பாட்டியல் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கப்படாமையினால், கலைத்திட்ட உருவாக்கத்தில் சமூகநீதியும், ஜனநாயகமயமாக்கலும் புறக்கணிக்கப்படுகின்றன.

சமத்துவம், சமூகநீதி, சகவாழ்வு போன்ற இலக்குகளின் அடிப்படையிலே மாற்றங்களுக்கு வித்திடும் வகையிலான கலைத்திட்டம் ஒன்றின் உள்ளடக்கத்தில் மாத்திரமல்லாது, அதன் அணுகுமுறையிலும் கூட, மாணவர்கள் தமது குரல்களையும், சமூக இருப்பிடத் தையும் கண்டுகொள்ளுவர். கல்விச் சூழலின் அசமத்துவங்கள் குறித்து விழிப்பான பாடத்திட்டமானது, கல்வியின் அர்த்தங்களையும், செயல்பாட்டியலினையும், மாணவர்கள் ஜனநாயகத்திற்காக நகர்த்திச் செல்லுவதற்கு அவர்களுக்கு வழிகாட்டுகிறது.

அரச பல்கலைக்கழகங்களுக்கு நுழையும் மாணவர்கள் பல்வேறு சமூகப் பொருளாதாரப் பின்னணிகளினைச் சேர்ந்தவர்கள். மாவட்டக் கோட்டா முறையானது பல்கலைக்கழகக் கல்வியின் ஜனநாயக மயமாக்கலுக்குப் பங்களித்திருப்பினும், ஒரு மாவட்டத்தி னுள் இருக்கும் நகர்ப்புற - கிராமப்புற பாடசாலைகளுக்கு இடையிலான அசமத்துவங்களினாலும், தேசிய - மாகாணப் பாடசாலைகளுக்கு இடை யிலான அசமத்துவங்களினாலும், மாவட்டத்திற்குள் இருக்கும் வர்க்க, சாதிய ஏற்றத்தாழ்வுகளினாலும் கல்வித் துறையிலே இடம்பெறும் புறக்கணிப்புக்களை அது வெளிக்காட்டுவதில்லை. வசதிகள் போதுமாக இல்லாத பாடசாலைகளிலே கற்றவர்கள், வசதிகள் நிறைந்த பாடசாலைகளிலே கற்ற தங்கள் சகாக்களுக்கு ஈடாகத் தமது பல்கலைக்கழகக் கல்வியினைத் (குறிப்பாக முதலாவது வருடத்திலே) தொடருவதிலே சவால்களை எதிர்கொள்ளுகின்றனர். முதலாம் வருடப் பாடத்திட்டம், பெரும்பாலான சந்தரப்பங்களிலே வளங்கள் குறைவான பாடசாலைகளிலே பயின்றோருக்குப் ஆதரவானதாக இல்லை. இலவசக் கல்வி, மாவட்டக் கோட்டா முறை என்பவற்றின் மூலமான வாய்ப்புகளினை மட்டுமல்லாமல், அவற்றிற்கு இருக்கக் கூடிய வரம்புகளையும் கருத்திற்கொண்டே கலைத்திட்டம் திருத்தப்பட வேண்டும்.

கலைத்திட்டத்தினைத் துண்டாடுதல்

இன்றைய நவதாராளவாதச் சூழலிலே பாடத்திட்டம் கோட்பாடுகளை விட செயற்பாட்டுத் திறன்களுக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும் என வலியுறுத்தப் படுகின்றது. கோட்பாட்டினையும், செயல்பாட்டினையும் இருமையாகவும், ஒன்றிலிருந்து மற்றையதைப் பிரிக்கக் கூடியதுமாக நோக்கும் பார்வை வலுப்பெற்று வருகின்றது.

கோட்பாடுகளும் செயற்பாடுகளும் ஒன்றுக்கொன்று உயிரூட்டுவதனையும், எழுத்து, வாசிப்பு, விளக்கக்காட்சிகள் என்பன வெறும் செயன்முறைகள் அல்ல - அவற்றினை நாம் ஆராய்ச்சிக்குட்படுத்துகின்ற கருத்துகள், யோசனைகள் மற்றும் நாளாந்த நிலைமைகளில் இருந்து தனிமைப்படுத்திக் கற்க முடியாது என்பதனையும் பாடத்திட்டம் வெளிப்படுத்த வேண்டும்.

செயல்பாட்டுத் திறன்களை, விமர்சன செயல்பாட்டியலில் இருந்து பிரிப்பதன் மூலம் எமது மாணவர்களைக் கேள்விகளை எழுப்பாத, தமது சமூகக் கூட்டுக்களில் இருந்து அந்நியப்படுத்தப்பட்ட, குறிப்பிட்ட சில திறன்களைத் தொழிற்சந்தையிலே விநியோகிப்பவர்களாக மாற்ற நவதாராளவாதம் முற்படுகின்றது. கல்வியின் உதவியுடன் சமத்துவத்தினைத் தேடுவதுடனும், சமூகங்களினது கௌரவமான சகவாழ்வை உறுதி செய்யக்கூடிய வெளிகளை உருவாக்குவதுடனும், விமர்சன செயற்பாட்டியல் தொடர்புபட்டது. கல்விசார் சாதனைகளை தனிநபரின் முன்னேற்றமாகக் குறுக்கும் நவதாராளவாதப் பார்வைகளினை விலத்தி, விமர்சன செயற்பாட்டியலினையும், ஒத்துழைப்புக்களையும் ஊக்குவிக்கும் ஒரு சக்தியாகக் கலைத்திட்டம் அமைய வேண்டும்.

**விசேடத்துவமும் துறை-இடை அறிவூடாட்டமும்**

அறிவு, வேலை, உழைப்பு, சமூக உறவுகள் தொடர்பில் மாறுபட்ட கண்ணோட்டங்களைக் கொண்ட இரண்டு வகையான தொழிலாளர்களினை உருவாக்கும் நோக்குடன், துறைசார் விசேடத்துவம் (specialization), துறை-இடை அறிவூடாட்டம் (inter-disciplinarity) என்ற இரண்டு அணுகுமுறைகளினையும் ஒரே நேரத்தில், தனக்கேற்ற வகையில் கலைத்திட்டத்திலே பயன்படுத்த நவதாரளவாதம் முனைகின்றது. ஒருபுறத்தில், கல்வியினையும், தொழிலினையும் குறுகிய, சிறப்புத் துண்டுகளாக்கிப் பார்க்கப் பழக்கப்பட்ட மாணவர்களின் மூலமாக, இலாப நோக்கில், சிறப்புத் தன்மை மிக்க செயன்முறைகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்குத் தேவையான, குறிப்பிட்ட சில திறன்களில் மாத்திரம் பயிற்சி பெற்ற தொழிற்படையினை உருவாக்க அது முயற்சிக்கிறது. இவர்கள் தமது கல்வியினைப் பரந்த சமூக-பொருளாதார கட்டமைப்புக்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்க முடியாதோராய் உள்ளனர். கல்வியிலும், தொழிலும், சமூகத்திலும் நவதாராளவாதச் சுரண்டல்களுக்கு எதிரான கூட்டுறவுகளினை இவர்களினால் ஏற்படுத்த முடியாதுள்ளது. மறுபுறத்தில், துறை-இடை அறிவூடாட்டத்தின் ஊடாக மாணவர்களின் ஒரு பிரிவினரைக் கூடுதல் நெகிழ்ச்சியும், பல்திறமையும், பல் பணிகள் ஆற்றக்கூடியோராகவும், தனியார் துறையினரால் இலகுவில் சுரண்டப்படக் கூடியோராகவும் உருவாக்குவதற்கு நவதாராளவாதம் முற்படுகின்றது.

இதற்கான எதிர்வினை, குறுகிய சிந்தனை மிக்க கல்வியாளர்களினால், துறைகளுக்கு இடையிலான எல்லைகளைக் காவல் செய்யும் நோக்கிலும், அவற்றுக்கு இடையில் உறவுகள் வளர்வதனைத் தடுக்கும் நோக்கிலும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் இருந்து வரப்போவதில்லை. ஜனநாயகபூர்வக் கலைத்திட்டமானது துறைகளுக்கு இடையிலான கற்பித்தற் செயன்முறைகளுக்கும், துறைகளைக் ஊடறுத்துப் பட்டியலிடப்பட்ட பாட அலகுகளுக்கும், துறைகளுக்கு இடையிலான சமூகநீதியின் அடிப்படையிலான கூட்டுச் செயற்பாடுகளுக்கும் சந்தர்ப்பமளிக்க வேண்டும். அதேநேரத்தில், கட்டமைப்புசார் சிக்கல்களைப் புரிந்துகொள்வதற்கும், அவற்றினை இல்லாதொழிப்பதற்குமான ஆழமான விசாரணைகளுக்கும் அது இடமளிக்க வேண்டும். துறை-இடை ஊடாட்டம், விசேடத்துவம் போன்றவற்றினை நவதாராளவாதத்திடம் இருந்து விடுவித்து, ஜனநாயக பூர்வமான கல்வி மற்றும் சமூகச் செயன்முறைகளுக்குப் பங்களிக்கக் கூடிய, அறிவுசார் கூட்டுறவுச் செயன்முறைகளாகவும், அறிவுசார் ஆழத்தினை உருவாக்கும் விமர்சனச் செயற்பாடுகளாகவும் கலைத்திட்டம் முன்னிறுத்த வேண்டும்.

**மதிப்பீட்டினை படிமமயப்படுத்தல்**

மாணவர்களை மதிப்பீடு செய்யும் முறைகள் கலைத்திட்டத்திலே படிமமயமாக்கலுக்கும், தீவிரமான காவலுக்கும் உட்படுத்தப்படுகின்றன. மதிப்பீட்டு செயன்முறையின் கிட்டத்தட்ட ஒவ்வொரு அம்சத்தின் வரைபடமும் பாடத்திட்டத்திலே உள்ளடக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. இந்தப் போக்கு மதிப்பீட்டு முறைகளின் செயற்திறன் குறைகையில், புதிய மதிப்பீட்டு முறைகளை ஆசிரியர்கள் முன்னெடுப்பதிலே தடைகள் ஏற்படுகின்றது.

வெவ்வேறு தொகுதிகளைச் (batch) சேர்ந்த மாணவர்கள் ஒரு பொதுத் தொழிற்சந்தையில் இருக்கும் பதவிகளுக்காக போட்டியிடுகிறார்கள் என்பதுவும், அவர்களிலே யார் முன்னணியில் இருக்கிறார்கள் என்பதனைச் சந்தைக்குக் குறித்துக் கொடுக்க வேண்டிய பணி பல்கலைக்கழகத்துக்கு உரியது என்பதுவும் மதிப்பீட்டுச் செயன்முறைகளிலே படிமமயமாக்கலுக்கான அடிப்படைத் தர்க்கமாக அமைகின்றது. இங்கு சந்தையே தீர்மானிக்கும் சக்தியாக அமைவதுடன், இந்த அணுகுமுறை மாணவர் மத்தியில் போட்டியினையும், தனிநபர் வாதத்தினையும் ஊக்குவிக்கிறது.

கொரொணா போன்ற நெருக்கடியான ஒரு காலப்பகுதியிலே கற்பித்தல், கற்றல் இடம்பெறும் சூழலானது மாணவர்களின் புலமை வெளிப்பாட்டில் எவ்வாறு தாக்கத்தினை ஏற்படுத்துகிறது என்பதனைப் பொதுமைப்படுத்தப்பட்ட படிமமயமாக்கப்பட்ட மதிப்பீட்டு முறைகள் கருத்தில் எடுப்பதில்லை. அவை மதிப்பீடு தொடர்பாக ஆசிரியரின் புத்தாக்கப் பரிசோதனையினைக் கட்டுப்படுத்துகின்றன. மதிப்பீட்டில் நியாயத் தன்மையினை உறுதிப்படுத்த சில பரந்த, பொதுவான வழிகாட்டுதல்கள் அவசியமாக இருந்தாலும், அவை கற்றற் சூழலினைக் கவனத்திலே எடுப்பனவாகவும் இருக்க வேண்டும்.

கலைத்திட்டத்தினை அணுகும் முறையிலே முன்னேறுவதற்கு நாம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டும். கலைத்திட்டத்தினை நாம் எவ்வாறு சிந்திக்கிறோம் அதன் உள்ளடக்கம், அது முன்வைக்கும் முறைமைகளுக்கான தத்துவார்த்த அடிப்படைகள் எவை என்பது பற்றிய விரிவான உரையாடல்கள் அவசியம். மேலும் சமூகநீதிக்கும், ஜனநாயகமயமாக்கலுக்குமான எமது பரந்த வேட்கையின் ஒரு பகுதியாக ஜனநாயகபூர்வப் பாடத்திட்டத்திற்கான எமது போராட்டத்தை நாம் முன்னிறுத்த வேண்டும். ■

**எழுத்தாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கிலத்துறையிலே பணியாற்றுகிறார்.**

# தீவிர அரசியலில் இறங்கப்போகிறாரா வைகோவின் வாரிசு துரை வையாபுரி?



**ஆ. விஜயானந்த்**

ம.தி.மு.கவில், "வைகோவின் மகன் துரை வையாபுரிக்கு பதவி கொடுக்க வேண்டும்" என்ற குரல்கள் வலுப்பெற்றுள்ளன. "அரசியல் வாழ்க்கையில் தான் அடைந்த சிரமங்களை தன் குடும்பத்தினரும் பெற்றுவிடக் கூடாது என வைகோ நினைக்கிறார். ஆனால், அது கடந்து போக வேண்டிய ஒன்று" என்கிறார் ம.தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்யா. என்ன நடக்கிறது ம.தி.மு.கவில்?

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலுக்கு முன்பிருந்தே ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவின் மகன் துரை வையாபுரி, பல மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வந்தார். ம.தி.மு.க. தொண்டர்களின் வீடுகளில் நடக்கும் சுப நிகழ்ச்சிகள், துக்க காரியங்கள் என அனைத்திலும் அவர் பங்கேற்றார். இதுதவிர, தந்தையின் வழியில் வெளிநாடுகளில் துன்பப்படும் தமிழர்களை மீட்டுக் கொண்டு வருவதிலும் சமூக சேவையிலும் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார். தவிர, உடல்நலக் குறைவால் வைகோ அவதிப்பட்டு வந்ததால், அவரால் செல்ல முடியாத நிகழ்வுகளிலும் துரை வையாபுரி பங்கேற்றதை அக்கட்சியின் தொண்டர்கள் வரவேற்றனர்.

### என்னோடு அரசியல் போகட்டும்

சட்டப்பேரவை தேர்தலின்போது, "தேர்தலில் துரை நிற்க வேண்டும்" என்ற குரல்கள் எழுந்தன. அதற்கு வைகோவிடம் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை. அவரை கட்சிப் பதவிக்கு முன்னிறுத்துவதிலும் வைகோ ஆர்வம் காட்டவில்லை. இந்நிலையில், கடந்த 9ஆம் திகதி தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் அருகே உள்ள குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட கலிங்கப்பட்டி ஊராட்சியில் உள்ள வாக்குச்சாவடியில் மகன் துரை வையாபுரியுடன் சென்று வைகோ வாக்களித்தார்.

அப்போது தனது மகன் அரசியலுக்கு வருவது குறித்துப் பேசிய வைகோ, " என்னுடைய வாழ்க்கையில் 56 வருடங்களை பொதுவாழ்க்கைக்காக செலவழித்துள்ளேன். அதில் 28 வருடங்களில் இலட்சக்கணக்கான மைல்கள் பயணம் செய்துள்ளேன். நடை பயணமாகவும் ஆயிரக்கணக்கான மைல்கள் சென்றுள்ளேன். ஏராளமான போராட்டங்களில் பங்கேற்று ஐந்தரை வருடங்களுக்கு மேல் சிறையில் இருந்துள்ளேன். என்னுடைய மகனுக்கும் அப்படிப்பட்ட கடினமான நிலை வர வேண்டாம் என்பதுதான் என்னுடைய கருத்து. என்னோடு அரசியல் போகட்டும் என நினைக்கிறேன். ஆனால், கட்சிக்காரர்கள் எல்லாம் என்ன முடிவில் இருக்கிறார்கள் என தெரியவில்லை" என பேசியிருந்தார்.

### 93 சதவிகிதம் பேரின் ஆதரவு

வைகோவின் பேச்சு, ம.தி.மு.க. நிர்வாகிகள் மத்தியில் கலவையான உணர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக, பி.பி.சி. தமிழிடம் பேசிய ம.தி.மு.க மாநில நிர்வாகி ஒருவர், "கடந்த 2 மாதங்களுக்கு முன்பு நடந்த மாவட்ட செயலாளர் கூட்டத்தில், "அரசியலுக்கு துரை வர மாட்டார்" என வைகோ கூறினார். அப்போது பேசிய மாவட்ட செயலாளர் ஒருவர், "தலைவரின் உடல்நிலையை கருத்தில் கொண்டு அவர் கட்சிப் பதவிக்கு வர வேண்டும். கட்சிக்குள் அதிகளவில் இளைஞர்களைக் கொண்டு வருவதற்கு ஒருவர் வேண்டும். துரையின் சுற்றுப்பயணத்தின்போது, அவரது செயல்பாடுகளை இளைஞர்கள் வரவேற்கிறார்கள். எனவே, அவர் வர வேண்டும்" என குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய வட மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட செயலாளர் ஒருவர், "நீங்கள் நீண்டகாலம் வாழ வேண்டும் என விரும்புகிறோம். நீங்கள் மீண்டும் அலைந்து கொண்டிருந்தால் அது சரியாக இருக்காது. தவிர, உடல்நலனையும் வருத்திக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் செய்ய வேண்டிய பணிகளை எல்லாம் தாயகத்தில் அமர்ந்து துரை செய்து முடிப்பார்" என்றார். அந்தக் கூட்டத்தில் பேசிய 93 சதவிகிதம் பேர், துரை வையாபுரியின் வருகையை ஆதரித்துப் பேசினார்கள். ஆனால், அதனை வைகோ ஏற்றுக் கொள்ளவில்லை," என்கிறார்.

### வைகோவின் மனநிலை என்ன?

தொடர்ந்து பேசியவர், "ம.தி.மு.கவில் இளைஞரணி செயலாளர் பொறுப்பில் துரை வையாபுரியை அமர்த்த வேண்டும் என்பதில் நிர்வாகிகள் உறுதியாக உள்ளனர். அரசியலுக்கு வந்து சேவை செய்ய வேண்டும் என துரையும் நினைக்கிறார். தற்போது இளைஞரணி செயலாளர் பொறுப்பில் இருக்கும் கோவை ஈஸ்வரனுக்கு மாநில துணைப் பொதுச் செயலாளர் பதவியை அளித்துவிட்டு, அவரின் இடத்தில் துரை நியமிக்கப்பட வேண்டும் என நிர்வாகிகள் வலியுறுத்தி வருகின்றனர். இளைஞரணியில் அவர் இருந்தால்தான் சிறப்பாக இருக்கும் எனவும் நிர்வாகிகள் நினைக்கின்றனர்.

மாவட்ட சுற்றுப்பயணத்தின்போது, கட்சிக்காரர்களின் வாரிசுகளிடம் துரை பேசும்போது, "அப்பாவுடன் சேர்ந்து கட்சிக்காக உழைக்க வேண்டும்" என்றெல்லாம் பேச மாட்டார். "என்ன தொழில் செய்கிறீர்கள்?, அதனை எப்படி வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லப் போகிறீர்கள்?" என்றுதான் பேசுவார். இந்தக் கட்சியில் பணம் என்று எதுவும் இல்லை. எப்போதும் பூச்சிய நிலையில் தான் கட்சி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, விமர்சனங்களுக்கு பதில் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. கடந்த சட்டமன்றத் தேர்தலில் துரை போட்டியிட வேண்டும் என சிலர் விரும்பினர். அதனை வைகோ விரும்பவில்லை. "கட்சிக்காக உழைக்கட்டும், மக்கள் விரும்பினால் பதவிக்கு வரட்டும்" என்றுதான் வைகோ நினைக்கிறார்," என்கிறார்.

> **"கட்சிப் பதவிக்கு துரை வர வேண்டும் என்பதுதான் அனைவரின் விருப்பம். அரசியல் வாழ்வில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக கடுமையான உழைப்பை வைகோ கொடுத்துள்ளார். அண்மையில் உடல் நலமில்லாமல் இருந்தவர், தற்போது பழையபடி வந்துவிட்டார். இனியும் பழையபடி அவரால் சுற்றுப்பயணம், நடை பயணம், ஆர்ப்பாட்டம் என ஈடுபட முடியாது."**

"துரைக்கு பதவி கொடுப்பதில் என்ன சிரமம்?" என்றோம்.

"அரசியல்ரீதியாக தன் மீது வைக்கப்படுகின்ற விமர்சனத்தை வைகோ தாங்கிக் கொள்வார். அதேநேரம், தனது பிள்ளைகளைப் பற்றி யாரும் விமர்சனம் செய்துவிடக் கூடாது என்பதில் அவர் உறுதியாக இருக்கிறார். அண்மையில், மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நிறைவடைந்த பிறகும், துரையை முன்னிறுத்துவது தொடர்பாக சிலர் பேசியபோது கூட, "நான் பட்ட துயரங்கள் போதாதா. அந்த சிரமத்தை என் பிள்ளையின் தலையில் தூக்கி வைக்க நினைக்கிறீர்களா?" என வைகோ கோபப்பட்டார். தி.மு.க, அ.தி.மு.கவை போல பலமான கட்சியாக ம.தி.மு.க இல்லை. இங்கு அனைத்தையும் இழந்து நிற்பவர்கள்தான் ஏராளம். இப்படிப்பட்ட நிலையில், "துரை வந்தால் கட்சி பழையபடி கட்சி செயல்படும்" என நிர்வாகிகள் எதிர்பார்க்கின்றனர்" என்கிறார்.

இது தொடர்பாக, இராமநாதபுரம் மாவட்ட ம.தி.மு.க செயலாளர் பேட்ரிக்கிடம் பி.பி.சி தமிழுக்காக பேசினோம். "கட்சிப் பதவிக்கு துரை வர வேண்டும் என்பதுதான் அனைவரின் விருப்பம். அரசியல் வாழ்வில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக கடுமையான உழைப்பை வைகோ கொடுத்துள்ளார். அண்மையில் உடல் நலமில்லாமல் இருந்தவர், தற்போது பழையபடி வந்துவிட்டார். இனியும் பழையபடி அவரால் சுற்றுப்பயணம், நடைப் பயணம், ஆர்ப்பாட்டம் என ஈடுபடமுடியாது.

அதேநேரம், கொரோனா தொற்று காலத்தில் கட்சிக்காரர்களின் அனைத்து நிகழ்வுகளிலும் துரை பங்கேற்றார். இதனைப் பயன்படுத்திக் கொண்டு தலைவர் வைகோவுக்கு சற்று ஓய்வு கொடுக்க வேண்டும் என கட்சிக்காரர்கள் நினைக்கின்றனர். ஆனால், அவர் எந்தக் காலத்திலும் சோர்வடைய மாட்டார். அவர் உழைத்துக் கொண்டேதான் இருப்பார். களத்தில் துரையை இறக்கி வேலை பார்க்க வேண்டும் என்பதுதான் கட்சிக்காரர்களின் விருப்பம்" என்கிறார்.

### தலைவருக்குத்தான் அதிகாரம்

"தலைவரின் மகன் அரசியலுக்கு வருவதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஒரு கட்சித் தலைவரின் மகன் மாற்றுக் கட்சிக்கு சென்றால்தான் அது தவறு. அவர் இங்கு வந்து இயக்கப் பணிகளைச் செய்வது என்பது வரவேற்கத்தக்க ஒன்றுதான். அரசியல் பணியில் தான் அடைந்த சிரமங்களை குடும்பத்தினரும் அடையக் கூடாது எனத் தலைவர் நினைக்கிறார். அதுமட்டுமல்லாமல், வாரிசு அரசியலை ஊக்குவிக்கும் என்பது போலவும் ஒரு பிம்பம் உருவானது. அது கடந்து போக வேண்டிய ஒன்று. அதில் எந்தவித பொருளும் இல்லை. மற்றபடி, என்ன செய்ய வேண்டும் என்பது தலைவரின் அதிகாரத்துக்குட்பட்டது. தலைவர்தான் முடிவெடுக்க வேண்டும்" என்கிறார், ம.தி.மு.க துணைப் பொதுச் செயலாளர் மல்லை சத்யா.

"ம.தி.மு.க மாவட்ட செயலாளர்கள் கூட்டம் வரும் 20 ஆம் திகதி நடக்கவுள்ளது. அந்தக் கூட்டத்தில் வைகோவின் மகன் முன்னிறுத்தப்பட்டால், அடுத்து வரக்கூடிய பொதுக்குழுவில் அவரது நியமனத்துக்கு ஒப்புதல் பெறும் வேலைகள் தொடங்கும்" என்கின்றனர் ம.தி.மு.க நிர்வாகிகள்.

- பி.பி.சி.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் : 1 மணி 15 நிமி.

02. வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

1. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட மருத்துவமனை .................................................. நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டனர்.
(ஊளியர்களால், ஊழியர்களால்)
2. .................................................. திருவினையாக்கும்.
(முயற்சி, முயற்ச்சி)
3. .................................................. அகற்றும் பணியில் நகரசபைத் தொழிலாளர்கள் மும்முரமாக ஈடுபட்டனர்.
(குப்பை கூளங்களை, குப்பை கூழங்களை)
4. சீடன் தனது .................................... சென்று நடந்தவற்றைக் கூறினான்.
(குறுவிடம், குருவிடம்)

03. பன்மை வாக்கியங்களாக எழுதுக.

1. நான் ஓடினேன் ..........................................
2. மரம் அசைந்தது ..........................................

04. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக.

1. நடக்க இருப்பவற்றை முன்னரே கூறுபவன் ..........................................................................
2. கடவுள் இல்லையென வாதிடுபவன் ..........................................................................
3. அரசன், ஆசிரியர், தந்தை, தாய், தமையன் ஆகியோர் ..........................................................

05. வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான முடிக்கும் சொல்லை அடைப்புக்குள்ளிலிருந்து தெரிவு செய்து கோடிடுக.

1. கோழிகள் குப்பைகளைக் .................................................. (கிளறியது, கிளறின)
2. விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் திங்கட்கிழமை ..................................................
(ஆரம்பமாகின, ஆரம்பமாகும்)
3. நாங்கள் தினமும் காலையில் பால் .................................... (குடித்தோம், குடிப்போம்)

06. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

1. மின்னுவதெல்லாம் பொன்னல்ல ..........................................................................................
2. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது ..........................................................................................

07. பின்வரும் சொற்களுக்கான தமிழ் சொல்லை எழுதுக.

1. தும்றிய ............................................ 2. கொஸ்ஸ ............................................

08. பின்வரும் படத்திற்கான சிங்கள சொல்லை தமிழில் எழுதுக.



............................................

09. பின்வரும் சொற்களை தமிழில் எழுதுக.

1. Safety.................................... 2. Knife.............................

10. பின்வரும் சொற்களை ஆங்கிலத்திற்கு மாற்றி எழுதுக.

1. நாம் இலங்கையர் ..........................................................................
2. காற்று ..........................................................................

11. விளையாட்டு மனதிற்கு மகிழ்ச்சியையும், உடலுக்கு ஆரோக்கியத்தையும் தருகிறது. “விளையாட்டின் பயன்கள்” எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலை தொடர்புகளும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

1.........................................................................................................................................
2.........................................................................................................................................
3.........................................................................................................................................

# பெரும் உணவு தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம்!

## ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை



கொழும்பு, ஒக். 13

நாட்டில் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

தற்போதைய அரசு எவ்வித நோக்கமும், திட்டமும் இன்றி நாட்டை ஆட்சி செய்வதனால் நாடு பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

காலி - ஹக்மீமன பகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் வைத்து அவர் இந்த விடயத்தை கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“காலி மாவட்டத்தில் தேயிலை தொழிற்துறைகளில் ஈடுபடுவோர் பாரிய பிரச்னைகளை எதிர்நோக்கி வருகின்றனர். உரத் தட்டுப்பாடு காரணமாக தேயிலை செய்கை வழமைக்குத் திரும்ப இன்னும் ஒன்றரை ஆண்டுகள் தேவைப்படும். உலகில் தரமான உரத்தை 350 ரூபாய்க்கு வழங்க முடி யாது. அரசு ஆட்சியைப் பிடிக் கும் நோக்கில் பொய் வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்திருந்தது. தரம் குறைந்த உர வகைகளைப் பயன்படுத்துவதனால் மண் வளம் இழக்கும்.

அத்துடன் அடுத்த ஆண்டு நடுப்பகுதி அளவில் அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை மக்களுக்கு ஏற்படும்” - என்றார். (இ)

# தேர்தல் முறைமை மாற்றத்தின் ஊடாக ஆட்சியை தக்கவைக்க அரசு முயற்சி!



## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.13

**“ராஜபக்ஷ அரசு தேர்தல் முறைமை மாற்றங்களின் ஊடாக ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள முயற்சிக்கின்றது.”**

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜே.வி.பியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது:-

“ஜனாதிபதி, மூன்றில் இரண்டு மற்றும் 20 ஆவது திருத்தம் என அனைத்து அதிகாரங்களும் கிடைத்துள்ள நிலையிலும், ஆட்சியாளர்கள் மக்களுக்காக எதனையும் செய்யவில்லை.

அரசு தேர்தல் முறைமை மற்றும் புதிய அரசமைப்பு தொடர்பில் கதைத்தாலும் இப்போது மக்கள் கேட்பது அவற்றையல்ல.

தற்போதுள்ள விகிதாசாரத் தேர்தல் முறைமையே இப்போதைக்குச் சிறந்த ஜனநாயகத் தேர்தல் முறைமையாக இருக்கின்றது. ஆனால், எமது நாட்டில் மாறு பட்ட தேர்தல் முறைமைகளே உள்ளன.

பாராளுமன்றம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைக்கென மாறுபட்ட தேர்தல் முறைமைகள் உள்ளன. இவை அனைத்தும் ஒரே தேர்தல் முறைமையில் இருக்க வேண்டும்.

ஆனால், இதற்காகக் கலந்துரையாடுவதில்லை.

தற்போதைய பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பிரச்னைகளால் மக்கள் அரசுக்கு எதிராக அணிதிரள்கின்றனர்.

இதனால் தேர்தல் முறைமையில் மாற்றங்களைச் செய்து, ஏதேனும் ஒரு விளையாட்டை விளையாடி ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ள முடியுமா? என்றே அரசு சிந்திக்கின்றது” - என்றார். (இ)

# மேலும் 94 பேர் கைது!

கொழும்பு, ஒக். 13

சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 94 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி 2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 80 ஆயிரத்து 654 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்தின் எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ள 13 உள்நுழையும் மற்றும் வெளியேறும் சோதனைச் சாவடிகளில் நேற்றுமுன்தினம் 1,414 வாகனங்களில் பயணித்த 2 ஆயிரத்து 258 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் எனவும், அநாவசியமான முறையில் மாகாண எல்லையைக் கடந்து 186 வாகனங்களில் பயணித்த 317 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)

# விசேட சுற்றிவளைப்புகளில் 8 பேர் வசமாக சிக்கினார்கள்

கொழும்பு, ஒக். 13

நாடளாவிய ரீதியில் விசேட பொலிஸ் அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில், பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதற்கமைய பாணமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெடஓயா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட மூன்று சுற்றிவளைப்புகளில் அனுமதிப் பத்திரமின்றி டிராக்டர்களில் மணல் ஏற்றும் செயல்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது இரண்டு டிராக்டர்களும், ஜே.சி.பி. இயந்திரம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொத்துவில், திஸ்ஸமஹாராமை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 33, 34 மற்றும் 52 வயதுகளையுடைய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாகரை மத்தி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், காடழிப்பில்



ஈடுபட்ட குற்றச்சாட்டில் நால்வர் கைதுசெய்யப்பட்டு வாகரை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வாகரை பிரதேசத்தை சேர்ந்த 35, 48, 55 மற்றும் 67 வயதுகளையுடைய நால்வரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பு அழிக்கப்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மதுபான சுற்றிவளைப்பொன்றில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 33.75 லீற்றர் மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் 178 லீற்றர் கோடா, ஒரு எரிவாயு அடுப்பு என்பவற்றையும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர். (இ)

# யானை தாக்கி ஒருவர் மரணம்

அநுராதபுரம், ஒக். 13

காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் அநுராதபுரம், கல்கிரியாகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹஹேட்டியாவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மஹஹெட்டியாவ, பயாகல பிரதேசத்தை சேர்ந்த 64 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார். (இ)

# ரயில் கடவையில் கோர விபத்து; பொலிஸ் அதிகாரி ஒருவர் பலி!



திருகோணமலை, ஒக். 13

திருகோணமலை மாவட்டம், கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ரயில் கடவையில் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு திருகோணமலையிலிருந்து கந்தளாய்க்குச் சென்ற கார், ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட போதே விபத்துக்குள்ளானது எனவும், சாரதிக்கு ஏற்பட்ட தூக்கத்தினாலே விபத்து சம்பவித்துள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் காரின் சாரதியும் பொலிஸ் உத்தியோகத்தருமான மற்றொருவர் படுகாயங்களுடன் கந்தளாய் வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவத்தில் மாத்தளைப் பகுதியைச் சேர்ந்த டி.எல் சிறிசேன (வயது 55) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகிறனர். (இ)



## 14 கங்காருகள் கொலை; பதின்மவயதினர் கைது!

சிட்னி, ஒக். 13

அவுஸ்திரேலியாவின் சிட்னியில் தெற்கு கடற்கரை பகுதியில் 14 கங்காருகள் கொடூரமாகக் கொல்லப்பட்டன. இந்தக் குற்றச்சாட்டில் 17 வயதேயான இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேட்மன்ஸ் குடாவின் இரு வேறு வீதிகளில் வெட்டப்பட்ட விலங்குகளின் உடல் பாகங்களை அந்தப் பகுதி மக்கள் கண்டுபிடித்தனர். இது குறித்து அவர்கள் பொலிஸாரிடம் முறையிட்டனர்.

விசாரணை நடத்திய பொலிஸார் நேற்று முன்தினம் 17 வயதான இருவரைக் கைது செய்தனர். கங்காருகளை கொலை செய்தமைக்கான காரணத்தை அவர்கள் பொலிஸாருக்கு தெரிவிக்கவில்லை.

கைதான இருவர் மீதும், பொறுப்பற்ற முறையில் மிருகங்களை அடித்துக் கொன்றனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டது.

இந்தக் குற்றத்திற்காக நேற்று அவர்களுக்கு 5 ஆண்டுகள் சிறையும் 22 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர்கள் தண்டப்பணமும் விதிக்கப்பட்டது.

சிட்னியின் தெற்கு கடற்கரையில் கங்காருகள் அதிகம் உள்ளன. அவுஸ்திரேலியாவில் சராசரியாக ஒவ்வோர் ஆண்டும் 50 அயிரம் விலங்குகள் வன்கொடுமைகளால் உயிரிழக்கின்றன என்று முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ஐ)

# பெலாரஸ் வழியே ஐரோப்பாவினுள் நுழைய இலங்கையர்களும் முயற்சி!

## எல்லையோரம் ஆணின் சடலம் மீட்பு

மின்ஸ்க்,ஒக்.13

பெலாரஸ் - லித்துவேனியா எல்லைப் பகுதி குடியேற்றவாசிகளுக்கு ஆபத்தான இடமாக மாறியுள்ளது. பெலாரஸ் நாட்டினூடாக ஐரோப்பிய ஒன்றிய எல்லைக்குள் நுழைய முயல்வோர் இரு நாடுகளினதும் எல்லைக்காவல் படைகளால் மாறிமாறிப் பந்தாடப்படும் நிலை அங்கு காணப்படுகிறது.



பதற்றம் நிறைந்த அந்த எல்லைப் பகுதியில் இருந்து இலங்கையர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருப்பதாக பெலாரஸ் ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன. கடந்த 5ஆம் திகதி லித்துவேனியாவுடனான தேசிய எல்லையில் இருந்து 500 மீற்றர்கள் தொலைவில் கண்டு மீட்கப்பட்ட அந்தச் சடலம் இலங்கையைச் சேர்ந்த 29 வயது ஆண் ஒருவருடையது என்பதை சடலத்துடன் காணப்பட்ட ஆவணங்கள் மூலம் பெலாரஸ் பொலீஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். பெலாரஸ் -1 தொலைக் காட்சிச் சேவை (Belarus 1 TV channel) இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

உயிரிழந்த இலங்கையர் லித்துவேனியா எல்லைக்குள் நுழைய முயன்று பல தடவைகள் அந்நாட்டின் எல்லைப்படையால் விரட்டப்பட்ட குடியேறிகள் குழு ஒன்றைச் சேர்ந்தவர் என்ற தகவலை பெலாரஸ் அதிகாரி ஒருவர் வெளியிட்டிருக்கிறார். ஆனால், அவரது உயிரிழப்புக்கான காரணம் என்ன என்பது தெரியவரவில்லை.

மரணத்துக்கான காரணத்தை அறிவதற்காக பிரேத பரிசோதனையும் தடயவியல் சோதனைகளும் நடத்தப்படவுள்ளன என்று பெலாரஸ் அதிகாரிகளை ஆதாரம் காட்டிச் செய்திகள் வெளியாகியுள்ளன. விசாரணையாளர்கள் அப்பகுதி உள்ளூர்வாசிகளிடமிருந்தும் தகவல்களைச் சேகரித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

குடியேற்றவாசிகள் எல்லை தாண்டி லித்துவேனியாவுக்குள் செல்வதைப் பெலாரஸ் படைகள் தூண்டி வருவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. லித்துவேனியா தனது எல்லையில் வேலிகளைப் பலப்படுத்திப் படைகளை நிறுத்திக் குடியேற்றவாசிகளைத் தடுத்து வருகிறது. தடுத்து நிறுத்தப்பட்ட பலர் எல்லையோரம் பசி பட்டினியாலும் குளிரில் சிக்கியும் உயிராபத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்று மனிதநேய அமைப்புகள் கூறியுள்ளன. (ஐ)

# 1500 ஆண்டுகள் பழமையான மதுபான ஆலை கண்டுபிடிப்பு!



ஜெருசலேம், ஒக். 13

இஸ்ரேலில் 1500 ஆண்டுகளுக்கு முன்னர் மதுபானம் உற்பத்தி செய்யப்பட்ட மிகப் பெரிய தொழிற்சாலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கு ஆண்டுக்கு 20 இலட்சம் லீற்றர் வைன் தயாரிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் நகரிலிருந்து தெற்கே யாஃப் என்ற நகரிலேயே இந்த மதுபான ஆலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பைசன்ரைன் பேரரசு காலத்தில் செயல்பட்ட இந்த மதுபான தொழிற்சாலையில் சாறு எடுப்பதற்காக ஐந்து கட்டுமானங்கள் மண்ணுக்கு அடியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மிகநுட்பமாக தயாரிக்கப்பட்ட வைன் மத்திய தரைக் கடல் பகுதியை சுற்றியுள்ள பிராந்தியங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. அத்துடன், ஐரோப்பா, வட ஆபிரிக்கா, ஆசியாவின் பகுதிகளுக்கும் வைன் அனுப்பப்பட்டுள்ளன.

சாறு எடுக்கும் ஐந்து கட்டுமானங்கள் மட்டும் ஒரு சதுர கிலோமீற்றர் பரப்பில் இருந்துள்ளன. வைன் குடுவைகளை சேகரிப்பதற்காக களஞ்சிய அறை, மண் குடுவைகளை உற்பத்தி செய்வதற்கான இடம் என்பனவும் இங்கு இருந்தன. (ஐ)



# தென்கொரியா, அமெரிக்காவாலேயே ஆயுத வலுவை மேம்படுத்துகிறோம்!

## வடகொரிய ஜனாதிபதி அறிவிப்பு

பியாங்யொங், ஒக். 13

தென் கொரியாவின் ஆயுதக் குவிப்பும் அமெரிக்காவின் விரோத கொள்கைகளுமே தமது ஆயுத மேம்பாட்டு நடவடிக்கைகளுக்குக் காரணம் என வடகொரிய தலைவர் கிம் ஜோங் உன் கூறியுள்ளார்.

நாங்கள் தற்பாதுகாப்புக்காக மட்டுமே ஆயுதங்களைப் பெருக்குகிறோம். போரைத் தொடங்குவது வடகொரியாவின் நோக்கம் அல்ல. நாங்கள் யாருடனும் போரிட விரும்பவில்லை. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் போரைத் திணித்தால் அதனை எதிகொள்ளும் நோக்குடனுமே ஆயுத பலத்தை அதிகரித்து வருகிறோம்.

வடகொரியாவுக்கும் தென் கொரியாவுக்கும் இடையே அமெரிக்காவே பதற்றத்தை ஏற்படுத்துகிறது. வடகொரியா அமெரிக்காவுக்கு விரோதமான நாடல்ல. ஆனால், அதனை நிரூபிக்க வேண்டிய தேவை இல்லை என்றும் அந்த நாட்டின் ஜனாதிபதி கிம் ஜோங் உன் கூறியுள்ளார்.

இதேசமயம், வடகொரியாவுடன் பேச தயாராக இருப்பதாக அமெரிக்கா கூறுகிறது. ஆனால், அதற்கு முன் வடகொரியா அணு ஆயுத திட்டங்களை கைவிட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியது. ஆனால், இதை ஏற்க அந்த நாடு மறுத்துவிட்டது.

இந்த நிலையில், கொரோனா தொற்று பரவலால் வடகொரியாவின் ஆயுதபலம் வெகுவாக பாதித்துள்ளது. இதனால், தன் மீதான தடைகளைத் தளர்த்துவதற்கான ஓர் உபாயமாக அது ஆயுத பலத்தை அதிகரிக்கிறது என்று அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.(ஐ)

# ஆற்றில் விழுந்தது பஸ்; 13 பயணிகள் மரணம்!

பீஜிங், ஒக். 13

வடக்கு சீனாவின் ஹீபெய் மாகாணத்தின் ஷிஜி யாஜூவாங் நகரத்தில் பிங்ஷான் பிராந்தியத்தில் திங்கட் கிழமை பஸ் ஒன்று ஆற்றில் வீழ்ந்தது. இதில், பஸ்ஸில் பயணித்த 51 பேரில் 13 பேர் உயிரிழந்தனர். ஒருவர் காணாமல் போயுள்ளார். 37 பேரை மீட்புப் படையினர் மீட்டுள்ளனர்.

அயல் மாகாணமான சாங்ஷியில் பலத்த மழையால் ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. அப்பகுதியில் 17 இலட்சத்து 60 ஆயிரம் பாதிக்கப்பட்டுள்ளனர்.



இந்த நிலையில், அந்த மாகாணத்தில் வெள்ளத்தில் மூழ்கி 15 பொதுமக்கள் உயிரிழந்தனர். மூவரை காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### சகலதுறையில் நரைன் ஜொலிப்பு!

# இறுதிக்கு முதல் சுற்றுக்கு முன்னேறியது கொல்கத்தா!



சார்ஜா, ஒக். 13

சுனில் நரைனின் அற்புதமான பந்துவீச்சு, அதிரடியான துடுப் பாட்டம் ஆகியவற்றால் சார்ஜாவில் நேற்று நடந்த இறுதியாட்டத்துக்கு முதல் சுற்றுக்கு தகுதி பெற்றது கொல்கத்தா அணி.

சார்ஜாவில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த வெளியேற்றும் ஆட் டத்தில் (எலிமினேட்டர்) றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர், கொல் கத்தா நைற் ரைடர்ஸ் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 138 ஓட் டங்கள் சேர்த்தது. 139 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கு டன் களமிறங்கிய கொல்கத்தா, இரு பந்துகள் மீதமிருந்த நிலையில் 6 விக்கெட்களை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இந்த வெற்றி மூலம், இறுதி யாட்டத்துக்கு தகுதி பெறுவதற் கான இரண்டாவது போட்டியில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியுடன் கொல்கத்தா அணி இன்று புதன் கிழமை மோதுகின்றது. இதில் வெற்றி பெறும் அணி இறுதி யாட்டத்தில் சென்னை அணியுடன் மோதும்.

இந்தத் தோல்வியுடன் இரு தொடர்களில் இறுதியாட்டத்துக்கு முந்தைய சுற்றுக்கு பெங்களூர் அணி முன்னேறியபோதும் கிண் ணத்தை வெல்ல முடியாது வெளி யேறியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடியது பெங்களூர். தேவ்தத் படிக்கல், விராட் கோலி தொடக்கம் கொடுத் தனர். 21 ஓட்டங்களுடன் 5ஆவது ஓவரில் படிக்கல் ஆட்டமிழக்க, சிறீகர் பாரத் அடுத்து வந்தார்.

9 ஓவர்கள் நிறைவில், ஒரு விக் கெட் இழப்புக்கு 61 ஓட்டங்களைப் பெற்றது பெங்களூர். ஆனால், 10ஆவது ஓவரில் பெங்களூரின் விக்கெட்கள் மளமளவென சரிய ஆரம்பித்தன.

பாரத் 9, கோலி 39, டி வில்லி யர்ஸ் 11, மக்ஸ்வெல் 15, அஹமட் 13 என ஆட்டமிழக்கவே 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 138 ஓட்டங்களைப் பெற்றது பெங்களூர்.

கொல்கத்தாவின் பந்துவீச்சில் நரைன் 4 விக்கெட்களையும், பெர்குசன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

கொல்கத்தாவுக்கு தொடக்கம் கொடுத்த ஷுப்மன் கில், வெங்க டேஷ் ஐயர் அதிரடியாக விளை யாடினர். ஷுப்மன் கில் 4 பௌண்ட் ரிகளுடன் 29, வெங்கடேஷ் ஐயர் ஒரு சிக்ஸருடன் 26 ஓட்டங்களை எடுத்தனர்.

பின்னர் இணைந்த ராணாவும், நரைனும் ஆட்டத்தின் போக்கை மாற்றினர். ஆட்டத்தை தங்கள் போக்கில் திருப்ப பெங்களூர் பந்துவீச்சாளர்கள் முயன்றும் முடிய வில்லை. நரேன் (26 ஓட்டங்கள்), ராணா (23), கார்த்திக் (10) என ஆட்டமிழந்தனர். சஹிப் அல் ஹசன், மோர்கன் கூட்டணி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

கடைசி ஓவரில் 7 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் கிறிஸ்டியன் ஓவரில் சஹிப் அல் ஹசன் ஒரு பௌண்ட்ரி அடித்தபோதே ஆட்டம் முடிந்துவிட்டது, அடுத்த 3 ஓட்டங்களை எளிதாக எடுத்து அணியை வெற்றிக்கு அழைத்து சென்றனர். இறுதியில் 4 விக்கெட் களால் பெங்களூரை வெற்றி கொண்டது கொல்கத்தா.

கொல்கத்தா அணியின் வெற்றிக்கு முக்கிய காரணம் அந்த அணியின் சுழல் பந்துவீச்சாளர் சுனில் நரைன் மட்டும்தான். சுனில் நரைன் வீழ்த்திய 4 விக்கெட்கள், கிறிஸ்டியன் ஓவரில் அவர் அடித்த 3 சிக்ஸர்கள்தான் ஆட்டத்தின் போக்கையே கொல்கத்தா பக்கம் திருப்பின. 4 விக்கெட்களை கைப்பற்றி, 15 பந்துகளில் 26 ஓட்டங்கள் சேர்த்த சுனில் நரைனுக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது. (ஐ)



# அணிக்காக எதையும் செய்வதற்கு தயார்!

### தினேஷ் சந்திமால்

கொழும்பு, ஒக். 13

அணியின் தேவைக்காக எந்தவொரு துடுப்பாட்ட வரிசையிலும் துடுப்பெடுத்தாடவும், களத்தடுப்பில் ஈடுபடவும் தயாராகவுள்ளார் என்று இலங்கை கிரிக் கெட் அணியின் சிரேஷ்ட வீரரும் முன்னாள் தலை வருமான தினேஷ் சந்திமால் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தினால் சூம் தொழில் நுட்ப வசதியின் ஊடாக நடத்தப்பட்ட ஊடக சந்திப் பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

தினேஷ் சந்திமால் மேலும் கூறுகையில்,

"எமது அணியின் பயிற்றுநர் மற்றும் தெரிவுக் குழுவினர் என்னை ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகவும் விக்கெட் காப்பாளராகவும் களமிறக்கவே திட்ட மிட்டுள்ளனர். வழமையாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக துடுப்பெடுத்தாடி வந்த அவிஷ்க பெர்னான் டோவை நான்காம் இலக்க துடுப்பாட்ட வீரராக களமிறக்கவே திட்டமிட்டுள்ளோம்.

அவரும் ஓமான் அணிக்கெதிரான பயிற்சிப் போட்டி யின்போது நான்காம் இலக்க துடுப்பாட்ட வீரராக களமிறங்கி அசத்தியிருந்தார். குசல் ஜனித் பெரேரா உபாதையிலிருந்து குணம் பெற்றுள்ளார். அவர் அணிக் குள் வந்தால் பெரும் பலமாக இருக்கும். எவ்வாறாயி னும், நானும் பெத்தும் நிஸ்ஸங்கவும் ஆரம்பத் துடுப் பாட்ட வீரர்களாக களமிறங்குவதே எமது திட்டமாக உள்ளது.

இந்நிலையில், அணியின் தேவைக் கருதி என்னை எந்த இடத்தில் துடுப்பெடுத்தாடும்படி பணித்தாலும் அந்த இடத்தில் துடுப்பெடுத்தாடுவதற்கும், களத்தடுப் பில் ஈடுபடுவதற்கும் தயாராக உள்ளேன்" என்றார். (ஐ)



# உதைபந்தாட்ட உலக கிண்ணம் முதல் அணியாக ஜேர்மனி தகுதி!

ஸ்கோப்ஜே, ஒக். 13

2022 உதைபந்தாட்ட உலகக் கிண்ணப் போட்டிக்கு முதல் அணியாக ஜேர்மனி தகுதி பெற்றது.

வடக்கு மசிடோனியாவில் நேற்று முன்தினம் நடந்த உலகக் கிண்ணத் தகுதி சுற்றுப் போட்டியில் வடக்கு மசிடோனியா அணியை 0 - 4 என்ற கோல் கணக்கில் ஜேர்மனி வெற்றிபெற்றது. இதன் மூலமே உலகக் கிண் ணத் தொடருக்கு முதல் அணியாக அந்த அணி தகுதி பெற்றது.

முதல் பாதியில் இரு அணிகளும் கோல் எதனையும் அடிக்கவில்லை. ஆனால், ஜேர்மனி வீரர் வெர்னர் இரு கோல்களை (70, 73ஆவது நிமிடங்களில்) அடித்தார். 50ஆவது நிமிடத்தில் ஹாவெர்ட்ஸ், 83ஆவது நிமிடத்தில் முசிலா ஆகியோரும் கோல் அடித்தனர்.

இதன் மூலம் 21 புள்ளிகளைப் பெற்று முதல் அணியாக உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்றுள்ளது.(ஐ)

# "விளையாடும் கடைசிநாள்வரை பெங்களூர் அணியில் இருப்பேன்"

சார்ஜா, ஒக். 13

பெங்களூர் அணிக்காக நிச்சயமாக விளையாடு வேன். ஐ. பி. எல். தொடரில் நான் விளையாடும் கடைசிநாள் வரை அணிக்காக விசுவாசமாக இருப்பேன், இந்த அணிக்காக 120 சதவீதம் உழைப்பை வழங்கி யிருக்கிறேன் என்று அந்த அணியின் தலைவர் விராட் கோலி தெரிவித்துள்ளார்.

சார்ஜாவில் நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் பெங்களூர் அணி தோல்விடையடைந்ததால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறாமல் வெளியேறியது.

பெங்களூர் அணிக்கு கோலி, கடந்த 10 ஆண்டுக ளாக தலைவராக இருந்தபோதும் ஒருமுறைகூட சம்பியன் பட்டத்தை வெல்ல முடியவில்லை. இந்த



நிலையில், தொடரின் இரண்டாவது பாகம் ஆரம்பிக் கும்போதே இந்த வருடத்துடன் தலைமைப் பொறுப்பி லிருந்து விலகுவார் என்று அவர் அறிவித்திருந்தார்.

போட்டி முடிந்த பின்னர் கருத்துவெளியிடுகையில், பெங்களூர் அணியில் ஒரு வீரராக நான் தொடர் வேன், அந்த அணிக்காக விசுவாசமாக இருப்பேன். விசுவாசம் என்பது என்னைப் பொறுத்தவரை வார்த்தை களில் கூறுவதை மேலானது. பெங்களூர் அணியில் வந்து விளையாடும் இளம் வீரர்கள் நம்பிக்கையுடனும், சுதந்திரமாகவும் விளையாடும் கலாசாரத்தை நான் உருவாக்க முயற்சித்துள்ளேன். இதேபோன்ற கலாசாரத் தைத்தான் நான் இந்திய அணியிலும் உருவாக்கியிருக்கி றேன்.

நான் என்னால் முடிந்த அளவு சிறப்பாக அணிக்காக செய்திருக்கிறேன். இதற்கான எதிர்வினை, பதில் எவ் வாறு இருக்கும் என எனக்குத் தெரியாது. ஆனால், பெங்களூர் அணிக்காக 120 சதவீதம் உழைப்பை ஒவ்வொருமுறையும் வழங்கியிருக்கிறேன். அடுத்த ஒரு வீரராகவும் இதை நான் செய்வேன். அடுத்த 3 ஆண்டு களுக்கு மீண்டும் மறுசீரமைக்கவும், மறுகட்டமைப்பை உருவாக்கவும், அடுத்து யார் தலைமையில் செல்லப் போகிறோம் என்பதற்கான சிறந்த நேரம்.

நான் வேறு ஏதாவது அணியில் விளையாடுவேன் என்று என்னை பார்க்கவில்லை. விசுவாசம் என்பது உலக இன்பங்களைவிட எனக்கு முக்கியம். ஐ. பி. எல். தொடரில் கடைசிப் போட்டியில் நான் கடைசியாக விளையாடும்வரை நான் பெங்களூர் அணிக்காக விளை யாடுவேன் - என்றார். (ஐ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வன்னி மாணவருக்கு உதவிகள்





வடமராட்சி, ஒக். 13

வடமராட்சி தொண்டை மானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமம் சைவ கலை பண்பாட்டுப் பேரவை வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த மாண வர்களுக்குக் கல்விச் செயல் திட்ட உதவிகளை நேற்றுமுன் தினம் வழங்கியுள்ளது.

வவுனியா, மன்னார் மாவட் டங்களைச் சார்ந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்ற பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட 13 மாணவர்க ளைத் தெரிவு செய்து தலா ஒவ் வொரு மாணவர்களுக்கும் 10 ஆயிரம் ரூபாய் நிதியும், 3 ஆயி ரம் ரூபாய் பெறுமதியான அத் தியவசியமான உணவுப் பொருள் களும் (அரிசி, சீனி, மா, தேயிலை, பருப்பு) மற்றும் கல்வி உபகரணங்களும் (கொப்பிகள்) வழங்கப்பட்டன.

இந்த உதவித் திட்டம் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளான கணேஸ்வரா மகா வித்தியால யம் - பாவற்குளம், வவுனியா மகா வித்தியாலயம், கலை மகள் வித்தியாலயம் - நெடுங் கேணி, ஸ்ரீநாகராசா வித்தியா லயம் - வவுனியா, சோமரசன் குளம் மகா வித்தியாலயம், ஓலுமடு மகா வித்தியாலயம் - நெடுங்கேணி, நெடுங்கேணி மகா வித்தியாலயம், மன்னார் மாவட்டத்தைச் சார்ந்த சென் சேவியர் ஆண்கள் பாடசாலை ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு அவர் களது இல்லங்களிலும், பாட சாலைகளிலும் நேரடியாகச் சென்று நிதியும், உதவிப் பொருள்களும் அமுதகலாசுரபி மோகனதாஸ் சுவாமிகள் தலை மையில் அவரோடு இணைந்த ஆச்சிரம தொண்டர்களாலும் கையளிக்கப்பட்டன.

இந்த உதவித் திட்டத்தில் செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினர் பு. சுஜீவன், வவு னியா தெற்கு பிரதேச சபை தவி சாளர் த. யோகராசா, உறுப்பி னர் வே. குகதாசன், வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பி னர் பொ. தேவராசா, அறப்பணிச் செயல்பாட்டாளர் இ.தயாபரன் ஆகியோர்கள் பங்குபற்றினார்கள். (இ - 02)

# வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டவர்கள் மறியலில்

கொழும்பு, ஒக். 13

வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட அதிகாரி கள் நால்வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட் டுள்ளது.

குறித்த நால்வரையும் எதிர் வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வத்தளை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த 4 சதொச அதிகாரி கள் நேற்றுமுன்தினம் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதி காரிகளால் கைது செய்யப் பட்டனர்.

கொள்வனவு தொடர்பான உதவி மேலாளர், சிரேஷ்ட விநி யோக முகாமையாளர், விநி யோக முகாமையாளர் மற்றும் வெலிசறை மொத்த விற்பனை முகாமையாளர் ஆகியோரே இவ் வாறு கைது செய்யப்பட்டனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தின் பணிப்பாளரின் மேற் பார்வையின் கீழ் மேற்கொள் ளப்படும் விசாரணைகள் தொடர்பாக வாக்குமூலங்களை வழங்குவதற்காக சந்தேகநபர் கள் வந்திருந்தபோது இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச நாடுகளால் இலங்கைக்கு ஆபத்து

## ஆளும் கட்சி எம்.பி. விஜயதாஸ எச்சரிக்கை



**கொழும்பு, ஒக்.13**

**“வெளிநாடுகளின் அழுத்தங்களால் இலங்கை ஆபத்து நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இலங்கை தற்போது எரிமலையின் மீது இருக் கின்றது என்றே கூற முடியும். அந்த எரிமலை எப்போது வெடித்துச் சிதறும் என்பதை எவ ராலும் கூற முடியாது.”**

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் பாராளு மன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக் கையில்,

“சீன சார்பு ஆட்சியாளர்கள் உருவானா நாளில் இருந்து நாடு ஆபத்துக்குள் தள்ளப்பட்டுள் ளது. அரசியல்வாதிகள் ருவான் வெலிசாய, தலதா மாளிகை ஆகியவற்றுக்குச் சென்று நாட் டில் எந்த தேசிய வளங்களும் விற்பனை செய்யப்பட மாட் டாது என உறுதி எடுத்துக் கொள்கின்றனர்.

அவ்வாறு கூறிய ஓர் அணி 2000ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்து, பொருளாதார வளங் களை விற்பனை செய்தது. இறுதியில் அவற்றைக் காப்பாற்ற வரிசையாக வழக்குகளைத் தொடர வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

காப்புறுதிக் கூட்டுத்தாப னம், லங்கா வைத்தியசாலை, துறைமுகக் காணிகள், இலங்கை போக்குவரத்துச் சபை என நாட்டின் தேசிய வளங்கள் விற்பனை செய்யப்பட்டன.

வழக்குகளைத் தொடர்ந்து அவற்றை மீண்டும் பெற்றுக் கொண்டோம். இதனை அரசோ அல்லது எதிர்க்கட் சியோ செய்யவில்லை. உயி ருக்கு ஆபத்து இருப்பதைக் கவ னத்தில் கொள்ளாது அவற்றை நானே செய்தேன்.

கடந்த அரசின் காலத்தில் ரணில் விக்கிரமசிங்க அம்பாந் தோட்டை துறைமுகத்தை சீனா வுக்குக் குத்தகைக்குக் கொடுத் தன் நெருக்கடியைத் தற்போது இலகுவாகத் தீர்க்க முடியாது.

சீனாவுக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தை வழங்கியதால், அமெரிக்காவும் தனக்கு அது வேண்டும் என்ற நிலைப்பாட் டில் உள்ளது.

இலங்கை சீனாவுக்குச் சார் பான நிலைப்பாட்டில் இருக் கும் அவரை, அமெரிக்கா, இந் தியா மற்றும் ஐரோப்பிய நாடு களிடம் இருந்து விடுபட முடி யாது” - என்றார். (இ)

# பதியுதீன்களின் மனுக்கள் 15இல் பரிசீலனைக்கு

கொழும்பு, ஒக். 13

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அவ ரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுக் களை இந்த மாதம் 15 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள என்று உயர்நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறி யலில் வைக்கப்பட்டுள்ள தங்களை விடுதலை செய்யு மாறு உத்தரவிடக் கோரி தங்க ளின் சட்டத்தரணிகள் ஊடாக மேற்குறிப்பிட்ட இருவரும் மனுக்களைத் தாக்கல் செய் துள்ளனர். (இ)

# நவீன தொடர்பாடல் வழிமுறைகளைப் பயன்படுத்தி அழைப்பாணை அனுப்பும் சட்டவரைவுக்கு அங்கீகாரம்

கொழும்பு, ஒக். 13

வழக்கொன்றின் தரப்பினர்க ளுக்கு அழைப்பாணை அனுப் பும்போது மின்னஞ்சல் மற்றும் கைபேசி குறுஞ்செய்தி போன்ற வற்றினை பயன்படுத்துவது தொடர்பான சட்டமூலத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங் கியுள்ளது.

அழைப்பாணை பிறப்பித் தல் மற்றும் வழங்கல் தொடர் பாக தற்போது காணப்படும் நடைமுறைகளில் திருத்தம் மேற்கொள்ளவே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நீதி அமைச்சரால் நியமிக்கப் பட்டுள்ள குடியியல் சட்டத் திருத்தங்கள் தொடர்பான குழு இதற்கான பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

அதற்கமைய, வழக்கொன் றின் தரப்பினர்களுக்கு அழைப் பாணை அனுப்பும்போது மின்னஞ்சல் மற்றும் கைபேசி குறுஞ்செய்தி போன்ற சமகாலத் தில் அதிகமாகப் பயன்படுத் தப்படும் தொடர்பாடல் வழி முறைகளைப் பயன்படுத்துவது தொடர்பிலும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, குறித்த குழு பரிந்துரைத்துள்ள திருத்தங் களை உள்ளடக்கிக் குடியியல் வழக்குக் கோவை திருத்தம் செய்வதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்கு நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# புத்தளத்தில் திருமணத்தன்றே தனிமைப்படுத்தப்பட்ட தம்பதி

புத்தளம், ஒக். 13

புத்தளத்தில் அனுமதியின்றி திருமண நிகழ்வு நடத்திய நபர் கள் தனிமைப்படுத்தப்பட்டுள் ளனர்.

தனிமைப்படுத்தப்பட்டவர் களில் திருமணம் செய்த தம்பதி யும் உள்ளடங்குகின்றனர்.

மதுரங்குளிய - கொத்தன் தீவு பிரதேச வீட்டில் திருமண நிகழ்வு ஒன்று நடைபெறுகின் றது எனப் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்குத் தகவல் வழங்கப்பட்டது.

அதற்கமைய விசாரணை நடவடிக்கைகளுக்காகச் சுகா தாரப் பரிசோதகர்கள் அந்த வீட்டுக்குச் சென்றனர்.

திருமண நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் அதிக மானோர் அங்கிருந்து தப்பி யோடினர்.

எனினும், வீட்டில் இருந்த 20 பேரைக் கடுமையாக எச் சரித்த சுகாதாரப் பரிசோ தகர்கள் அவர்களை அந்த வீட்டிலேயே தனிமைப்படுத் தினர். (இ)

## அப்பன்,...

விரும்பவில்லை. அது தமிழ் அரசுக் கட்சிக்கு நல்லதல்ல."

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட் அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தான் உள்ளிட்டவர்கள், இனப்படுகொலை தொடர்பில் விசாரிக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களால் பொது வெளியில் பேசப்படுவது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவரிடம் நான் தெரிவித்தேன். கூட்டமைப்பின் ஒற்றுமையை சிதைக்கும் விதமாக சிறீதரன் உள்ளிட்டவர்கள் கூறிவரும் கருத்துக்கள் உள்ளிட்டவை தொடர்பில் விசாரிப்பதாகவும் நடவடிக்கை எடுக்கிறாரெனவும் இரா.சம்பந்தன் கூறியிருக்கின்றார்.

நாங்கள் ஏதோ காட்டிக்கொடுத்தோம், துரோகம் செய்தோம் என்ற ரீதியில் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.

சுமந்திரன் ஒருதடவை கூறியிருந்தார், அவருடன் நாங்கள் பேசி சில விடயங்களை சுமூகமாக தீர்த்திருக்கிறோம். சிறீதரனைப் பொறுத்தவரை இதனை அடிக்கடி கூறுவார். அதேபோல தேர்தல் காலத்தில் மிகவும் கூடுதலாகக் கூறுவார்.

ஆனால், நெடுங்கேணியில் அப்பன், தெய்வீகன் என்ற இரண்டு விடுதலைப் புலி உறுப்பினர்கள் யுத்தம் முடிந்து ஏறக்குறைய ஐந்து வருடங்களுக்குப் பின்னர் யாரால் காட்டிக் கொடுக்கப்பட்டார்கள்?அவர்கள் மாத்திரமல்ல வேறு சிலரும் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

அந்த அந்த நபர்களை யார் காட்டிக் கொடுத்தார்கள், எப்படி காட்டிக் கொடுக்கப்பட்டார்கள், ஏன் காட்டிக்கொடுக்கப்பட்டார்கள் என்பதை பகிரங்கமாக நான் கூறினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நல்லதல்ல. தமிழ் அரசுக்கட்சிக்கும் நல்லதல்ல. அடுத்ததாக அது நிச்சயமாக மக்களுக்கும் நல்லதல்ல.

எங்களை பொறுத்தவரை நாங்கள் காட்டிக் கொடுக்கவில்லை. எந்த காலத்திலும் காட்டிக் கொடுக்கவில்லை. எங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும், வேறு ஆயுத குழுக்களுக்குமிடையில் ஆயுத வழியில் போராட்டங்கள் இடம்பெற்றமை மக்கள் அனைவரும் அறிந்த விடயமே. நீண்ட காலமாக ஆயுதப் போராட்டங்கள் இடம்பெற்றன. நாங்கள் சண்டை பிடித்திருக்கின்றோம்.

இங்கு மாத்திரமல்ல உலகில் உள்ள அனைத்து ஆயுத விடுதலைப் போராட்டங்களிலும் இவை இடம் பெற்றிருக்கின்றன. அதற்குப் பின்னர் ஜனநாயக வழியில் நாங்கள் இறங்கியுள்ளோம்.

எனினும் தெய்வீகன், அப்பன் போன்றோர் நேரடியாக காட்டிக் கொடுக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார்கள். இது மக்களுக்கு தெரியும். அவர்களை யார் காட்டிக் கொடுத்தார்கள் என்பது தொடர்பில் நான் தற்போது கூற விரும்பவில்லை-என்றார். (அ-03)

## சர்வசன...

லத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இது தொடர்பான கடிதம் ஏற்கனவே இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிலையில், ஏனைய மூன்று நாடுகளின் தூதரகங்களிற்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அத்துடன், தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் அவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அந்த கடிதம் பார்வைக்காக அனுப்பி வைக்கப்பட்டன.

அனுப்பப்பட்ட அந்த கடிதத்திலே 1987ஆம் ஆண்டின் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான, நடைமுறையிலுள்ள மாகாண சபைகள் முறைமையானது இலங்கையால் கடந்த 3 வருடங்களாகக் கைவிடப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கமானது தேர்தலை நடத்துவதற்கு எவ்வித முயற்சியையும் எடுக்காமல், பதிலாக சபைகளுக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை அகற்றுவதிலேயே ஈடுபட்டுள்ளது.

இந்திய - இலங்கை ஒப்பந்தமானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குரிய பிராந்தியத்தை தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமாகத் தெளிவாக அங்கீகரித்துள்ளது. இந்த உடன்படிக்கையின் மூலம் கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை இலங்கை எப்போதுமே முழுமையாக அமுல்படுத்தவில்லை என்பதுடன் தற்பொழுது அதனை மேலும் பலமிழக்கச் செய்வதிலேயே ஈடுபட்டுள்ளது.

இந்திய - பசுபிக் பிராந்தியத்தில் நிரந்தர அமைதியை அடைவதற்கும் அதே சமயம் எமது பிராந்தியத்தில் சுதந்திரத்தையும் ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் உதவுவதன் பொருட்டு தமிழ் மக்கள் உலகிலுள்ள அதிகாரம்மிகுந்த நாடுகளில் ஒன்றான இந்தியாவிடம் அழைப்பு விடுக்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு எதிரான கடந்தகால வன்முறை வடிவங்கள் மீளஇடம்பெறாம விருப்பதற்கு உத்தரவாதம் அளிக்கவல்ல நிரந்தர அரசியல் தீர்வை ஜனநாயக ரீதியில் நிலைநாட்டுவதற்காகவும், அவர்களுக்கான ஈடுசெய் நீதியை வழங்குவதன் பொருட்டும் அவர்களை அடக்குமுறையிலிருந்தும் ஆக்கிரமிப்பிலிருந்தும் விடுவிப்பதன் பொருட்டும் இலங்கையின் வடக்கு- கிழக்குப் பிராந்தியத்திலுள்ள மக்களுக்காக ஐ. நாவால் கண்காணிக்கப்படுகின்ற குவாட் நாடுகளான அவுஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா போன்றனவற்றால் நடத்தப்படுகின்றதுமான பொதுசன வாக்கெடுப்பை ஒருங்கிணைப்பதற்காக உடனடியானதும் அவசரமானதுமான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு இந்தியாவிடம் கோருகின்றேன் - என்று குறிப்பிட்டுள்ளதாகவும் கூறினார். (ஐ-02 - 03)

## கிழக்கில் முதல்வர்...

யின் சார்பில் முதல்வர் வேட்பாளராகவே அவர் களமிறக்கப்படலாம் எனவும், இதற்காக பாராளுமன்ற உறுப்பினர் பதவியை அவர் துறப்பார் எனவும் தெரிய வருகின்றது.

இது தொடர்பில் பிள்ளையான் கட்சியின் பொதுச்செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தனிடம் வினவியபோது,

"கிழக்கு மாகாண மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் கட்சி எடுக்கும் தீர்மானத்துக்கு பிள்ளையான் ஒத்திசைவார்." என்று குறிப்பிட்டார். அதாவது கட்சி பச்சைக்கொடி காட்டினால் பிள்ளையான் களமிறங்குவார் என்பதே அவரின் கருத்தின் சுருக்கம்.

கடந்த பொதுத்தேர்தலில் பிள்ளையானின் கட்சி தனித்து போட்டியிட்டது. எனவே, பிள்ளையான் பதவி துறந்தாலும் அவரின் கட்சியை சேர்ந்த ஒருவர் பாராளுமன்றம் செல்லக்கூடும்.

2022 முற்பகுதியில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரச மருத்துவ...

உள்ளிட்ட கோரிக்கை களுக்கு கிடைத்த பதிலுக்கமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சரிடமிருந்து சாதகமான பதில் கிடைத்தமையால், இன்று நடத்தப்படவிருந்த பகிஷ்கரிப்பு தற்காலிகமாக கைவிடப்பட்டதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஷெனால் பெர்னாண்டோ தெரிவித்தார்.

## மாகாண தேர்தலை...

கிடையாது. தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் உள்ளது.

தேர்தலை நடத்தக்கூடிய சூழல் உருவாகும் முதல் சந்தர்ப்பத்திலேயே தேர்தல் நடத்தப்படும். நாமும் தயாராகவே இருக்கின்றோம்-என்றார்.

# கொரோனா தொற்றால் மேலும் 23 பேர் மரணம்!

கொழும்பு, ஒக். 13



நாட்டில் மேலும் 23 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் 11 ஆண்களும், 12 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் குறித்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களத்தால் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 377 ஆக அதிகரித்துள்ளது. (இ)

# 671 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்



கொழும்பு, ஒக். 13

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 671 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 27 ஆயிரத்து 735 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 10 ஆயிரத்து 301 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 90 ஆயிரத்து 800 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## 65 வடக்கு...

கைதானவர்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. அத்துடன், இவர்களை படகு மூலம் அழைத்து செல்வதற்கான ஏற்பாடு செய்த முகவரை கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## ஆசிரியர் சம்பள...

துள்ளது.

நேற்று நண்பகல் 12.00 மணியளவில் ஆரம்பமான இப்பேச்சு பி.ப. 3.30 வரையான மூன்றரை மணித்தியாலங்கள் இடம்பெற்று நிறைவடைந்துள்ளது. நேற்று முன் தினம் இடம்பெற்ற அமைச்சரவையில், அமைச்சரவை உப குழுவின் அறிக்கைக்கு அமைய, 3 கட் டங்களில் 3 வரவு-செலவுத் திட்டங்களில் சம்பள உயர்வை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் நேற்று பிரதமருடன் இடம்பெற்ற பேச்சைத் தொடர்ந்து, சம்பள அதிகரிப்பை 2 கட்டங்களில் வழங்க அரசாங்கம் இணங்குவதாக தெரிவித்துள்ளதாக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் அடிப்படையில் எதிர்வரும் 2022 ஜனவரியில் முதல் கட்ட சம்பள அதிகரிப்பும், 2023 இல் இரண்டாம் கட்ட சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கும் அரசாங்கம் இணங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, குறித்த கலந்துரையாடலில் பங்குபற்றிய பிரதிநிதிகள், இன்று ஏனைய சங்கங்களுடன் கலந்துரையாடி இறுதி முடிவை எடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர். (அ)

## நாட்டில்...

இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு அமைச்சுக்கும் உற்பத்திப் பொருளாதாரம் தொடர்பான பல்வேறு திட்டங்களுக்காக 25,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

நாட்டின் உணவு பாதுகாப்பு தொடர்பாக விவசாய அமைச்சர் மற்றும் அதனுடன் இணைந்த இராஜாங்க அமைச்சுகளுடன் நிதி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் உணவுப் பற்றாக்குறையுடன் பஞ்சம் ஏற்படும் என்று சிலர் பல்வேறு அறிக்கைகளை வெளியிடுகின்றனர்.

அவர்கள் எதிர்பார்ப்பதைப் போல் நாட்டில் பஞ்சம் ஏற்பட இடமளிக்க மாட்டோம்.

நாம் இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் உற்பத்திப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தியுள்ளோம்.

இந்த முறை வரவு - செலவுத் திட்டத்தில் கிராமத்துக்குப் பணம் அனுப்பும் முறையை உருவாக்கியுள்ளோம்.

உற்பத்தித் துறையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் கிராம மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது-என்றார்.(அ)

## பிரம்படி படுகொலை...

நடைபெற்றது.

பிரம்படி வீதி ஆரம்பிக்கும் இடத்தில், ஆடியபாதம் வீதியில் கொல்லப்பட்டவர்கள் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் தமது உறவுகளை நினைவேந்தினர்.

அமைதிப் படையாக இந்திய இராணுவம் 1987 ஆம் ஆண்டு இலங்கை வந்தது. பின்னாளில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை கைது செய்யும் நோக்கத்துடன் ஒக்ரோபர் 10ஆம் திகதி ஒப்ரேஷன் பவான் நடவடிக்கையை ஆரம்பித்தது. புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தங்கியிருந்தார் என்று சந்தேகிக்கப்பட்ட கொக்குவில் - பிரம்படி வீதிப் பகுதிக்குள் இந்திய இராணுவம் நுழைந்தது.

இந்த முயற்சியில் தோல்வியடைந்த இந்திய இராணுவம் அந்தப் பகுதியின் வீடுகளில் தங்கியிருந்த அப்பாவி பொதுமக்களை சுட்டுக்கொன்றது. அத்துடன், வீதியில் இளைஞர்களை படுக்க வைத்து அவர்களின் மேல் யுத்த டாங்கிகளை ஏற்றியும் கொன்றது. 1987 ஒக். 11, 12ஆம் நாள்களில் இடம்பெற்ற இந்தப் படுகொலையே இந்திய இராணுவம் இலங்கையில் முதல் நிகழ்த்திய படுகொலை என்று கூறப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# 13ஐ முழுதாக நிறைவேற்றியே தேர்தல் நடத்தப்பட வேண்டும்!

## தமிழ்க் கட்சிகள் ஒருமித்துக் கோருவது அவசியம் என்று ரெலோ வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 13

"எதிர்காலத்தில் மாகாண சபைத் தேர்தல் எப்போது நடத்தப்படுவதாக இருந்தாலும் அரசமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டம் முற்றுமுழுதாக நிறைவேற்றப்பட வேண்டும். அதன்பின்னரே மாகாண சபைத் தேர்தல்கள் நடத்துவது அர்த்தமுள்ளதாக அமையும்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி ரெலோ வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: -

"நடப்பிலிருக்கும் 13ஆவது திருத்தச் சட்டம் உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையாக இருக்கின்றது. கடந்த காலங்களில் மாகாண சபையின் பல அதிகாரங்கள் பறிக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான மாகாண சபை எங்களுடைய அரசியல் தீர்வாக நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இருக்கக்கூடிய அரசியல் அதிகாரங்களை இழப்பது என்பது சாணக்கியமானதல்ல.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படலாம் என அரசு அறிவித்துள்ளது. இந்தநிலையில் அதிகாரங்கள் பறிக்கப்பட்ட ஒரு மாகாண சபை முறைமையை நாங்கள் ஏற்பதா அல்லது முற்றுமுழுதாக 13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்ட மாகாண சபையை ஏற்பதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதற்கான சரியான நிலைப்பாட்டைத் தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் எட்ட வேண்டியது மாத்திரமல்ல வலியுறுத்த வேண்டியதும் கட்டாயமானதாகும்.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் தமிழர் அரசியல் தீர்வில் இந்தியாவின் நிலைப்பாடு சம்பந்தமான தீர்க்கமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்துவது, அதன் அடிப்படையிலான மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவது, அந்தக் கோரிக்கையை தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒருமித்த நின்று கோருவது என்பனவே அவை. இதனூடாக இதை தாண்டிய அரசியல் தீர்வை தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தியா தொடர்ந்தும் இதை வலியுறுத்தி வந்தாலும் தமிழர் தரப்பு ஒருமித்த நிலையில் கோரவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தச் செய்தியை தமிழர் தரப்பு சரியாகப் புரிந்து கொண்டதோ, இல்லையோ இலங்கை அரசு தந்திரமாக கையாள முற்பட்டுள்ளது.

இந்தநிலையில், 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி மாகாண சபைகளின் சுயாதீனத்தை உறுதிப்படுத்த அரசமைப்பில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் பற்றிய நீதி மன்ற தீர்ப்புகளும் தமிழ்த் தரப்பால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளும் உள்ளன.

தேர்தல் அறிவிப்பைத் தொடர்ந்து தேர்தல் வியூகங்களை வகுப்பதற்கு முன்னர், தற்போது அரசமைப்பில் இருக்கும் குறைந்தபட்ச அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக ஆக்குவதற்கு தமிழர் தரப்பு ஒருமித்த கோரிக்கையை சம்பந்தப்பட்ட தரப்புகளான இந்திய அரசிடமும் இலங்கை அரசிடமும் முன்வைக்க வேண்டியது கட்டாயமாக உள்ளது.

இதை நாம் தொடர்ந்தும் பல காலமாக வலியுறுத்தி வந்துள்ளோம். இன்று வரலாறு அந்தப் புள்ளியில் தமிழினத்தை கொண்டு வந்து நிறுத்தியுள்ளது. விமர்சனங்களை கடந்து ஆக்கபூர்வமாக ஒருமித்த நிலைப்பாட்டில் செயலாற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளைக் கோருகின்றோம்" - என்றுள்ளது. (இ)

## மரண அறிவித்தல்கள்



மலர்வு 12 - 06 - 1954 | உதிர்வு 12 - 10 - 2021

### சுப்பிரமணியம் சுந்தரலிங்கம்

யாழ்ப்பாணம் புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, கிளிநொச்சி புளியம்பொக்கணை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சுந்தரலிங்கம் அவர்கள் நேற்று (12.10.2021) செவ்வாய்க்கிழமை அன்று இறைபாதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் – நாகம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை – செங்கமலம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாம்பிகை (வள்ளி) அவர்களின் அன்புக் கணவரும், கமலதர்சன் (பிரான்ஸ்), லிகிதரன் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான விஜிதரன், தர்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், வேலாயுதபிள்ளை (நோர்வே), பிள்ளை (சுவிஸ்), வன்னியசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரமிளா (பிரான்ஸ்), ஜெனிகா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், தேந்துளசி, கலைமதி, கோபிசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய தகவல் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**கமலதர்சன் - மகன்**
**Mobile : +33699351551**

தகவல்:
**குடும்பத்தினர்**



மலர்வு 04 - 08 - 1934 | உதிர்வு 09 - 10 - 2021

### திருமதி சின்னத்துரை பரிமளம்

யாழ்ப்பாணம் காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பரிமளம் அவர்கள் கடந்த (09.10.2021) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், பொன்னையா – செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும்,காலஞ்சென்ற கனகசபாபதி – சின்னத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, பாலசிங்கம், அன்னலிங்கம் மற்றும் ஞானசுந்தரம், கமலம், விசாலாட்சி, அன்னலட்சுமி, கிருஷ்ணர் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,ஜெயராணி(கனடா), பாஸ்கரன் (சுவிஸ்), புவனேஸ்வரன் (சுவிஸ்), நகுலேஸ்வரன் (லண்டன்), பாலச்சந்திரன் (சுவிஸ்), யோகேஸ்வரன் (சுவிஸ்), ஜெகதீஸ்வரி (சுவிஸ்), ஜெயதேவி(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கதிர்காமநாதன், மதிவதனி, சுகந்தினி, தமயந்தி, தவநிதி, உமாதேவி, நடேஸ்வரலிங்கம், திலகரட்ணம் ஆகியோரின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்ற மோகன்ராஜ் மற்றும் கமல்ராஜ் – ஸ்ரீபிரியதர்ஷினி, அமிர்தராஜ் – நிரோஷனா, சிந் துஜா– பிரதீபன், தீபன்ராஜ்– வைஷ்ணவி, சுவாதி– லக்ஷன், சுவேதன், சுவேதா, சுகிர்தன், பிருந்தனன், வாமணன், மயூரேஷன், மதுராயி, சுஜிதா, சுஜிபன், சுபதன், ஜதுர்சென், ஜனுஷன், ஜஸ்வன், சாருஜா, சாத்வீகா, சமஸ்டிகா, சுருதிகா, சேயோன் ஆகியோரின் பாசமிகு பாட்டியும்,குருவர்ஷன், வர்ஜாயினி, பவிர்ஷன், அபிஷ்னா, அதீஷன், கவிஷன். கவிஷ்னா, ஆகீஷன், சபரினா, நிவிஷா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.10.2021) புதன்கிழமை அன்று முற்பகல் 11:00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**நகுலேஸ்வரன் - மகன்**
**Mobile : +447848039428**

தகவல்:
**குடும்பத்தினர்**

## இணையதள பாதுகாப்பு சட்டத்தை வகுப்பதற்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஒக். 13

இலங்கையில் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இணையதள பாதுகாப்புச் சட்டத்தை வகுப்பதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கு அமைய இரண்டு சட்டமூலங்களைத் தயாரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முப்படையினர், பொலிஸ் மற்றும் ஏனைய பிரதிநிதித்துவ நிறுவனங்கள் தற்போது தத்தமது நிறுவன மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இணையதள பாதுகாப்பு அலகின் மூலம் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளை மேலும் வினைத்திறனாக மேற்கொள்வதற்கு இயலுமான வகையில் தேவையான ஏற்பாடுகளை உள்வாங்கி, தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கியதாக புதிய சட்டம் வகுக்கப்படவுள்ளது என அரசு தெரிவித்துள்ளது.

அத்தோடு, தேசிய பாதுகாப்புக்கு ஏற்புடைய விடயங்கள் தவிர்ந்த தேசிய தகவல்கள் மற்றும் இணையதளப் பாதுகாப்பு மூலோபாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் சட்டமொன்றை தயாரிக்கவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (இ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-துர்க்கா,தேவ் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை



**இரவு**
07.00 மணி : பாரதீ
08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

ஓ ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம் திங்கள்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு